Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2035 கார்த்திகை - 15 30-11-2004 செவ்வாய்க்கிழமை ஓசை -286

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
(சி-10704) T.P: 024-222 4247



-இராணுவத்தின் உதவியுடன் சிங்களக் காடையர் குழுக்களால்-

# தமிழர்கள் மீது வன்முறை கட்டவிழ்ப்பு

# திருமலையில் பெரும் பதற்றநிலை!

## வாகனங்கள், வீடுகள் தீவைப்பு சில பகுதிகள் மக்கள் இடம்பெயர்வு

(திருமலை)

**திருமலை மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற பல்வேறு வன்முறைச்சம்பவங்களை அடுத்து அங்கு பதற்றநிலை உருவாகியுள்ளது சிறிலங்கா இராணுவத்தினரும்–சிங்களக்காடையர்களும் இணைந்து தமிழ் மக்கள் மீதும் அவர்களின் உடமைகள்மீதும் மேற்கொண்டுள்ள தாக்குதல்களினால் உருவாகியுள்ள பதற்றத்தை மேலும் வன்முறைகள் வெடிக்கலாம் எனத் தமிழ் மக்கள் மத்தியில் அச்சம் எழுந்துள்ளது.**

காலை 10.05 மணியளவில் திருகோணமலை கொழும்பு பிரயாணத்தில் ஈடுபடுவதற்காக சீனக்குடாவில் இருந்து திருகோணமலை நகர் நோக்கிவந்தபேருந்து மீது ஆண்டான்குளத்திற்குச் சமீபமாகவுள்ள சிங்களவர் வாழும் பாதிஸ்புர என்னும் இடத்தில் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து மின் கம்பத்துடன் மோதிப் புரண்டது. இதில் பயணம் செய்த மூவர் காயங்களுக்கு உள்ளாகினர். சாரதி மரணமானார். அவரின் வலது கை விரல்கள் பலத்த சேதத்திற்குள்ளாகியிருந்தது. மிகுந்தபுரம் பகுதியைச் சேர்ந்த சுரங்க சம்பத்த வயது 24 என்பவரே இவ்வாறு மரணமானார். இச் சம்பவத்தைக் கேள்வியுற்ற நகரில் உள்ள சிங்கள காடையர் குழுவினர் 10.30 மணியளவில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு அமுலானபோதும் வீதிகளில் இராணுவத்தினருடன் சிங்களக் காடையர்கள்

(அலுவலக செய்தியாளர்)

திருகோணமலையில் படையினரின் ஆதரவுடன் சிங்களக் காடையர்கள் வீதிகளில் ஆயுதங்களுடன் நடமாடி வருவ தாக திருகோணமலையில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

படையினரின் ஆதரவுடன் ஊரடங்கு வேளையிலும் காடையர்கள் வாள்,கத்தி, கோடாரிகள் உட்பட்ட ஆயுதங்களுடன் ஊரடங்கு வேளையிலும் தமிழ் மக்களின் பகுதிகளில் நடமாடி வருகின்றனர். இதனால் மக்கள் பெரும்பீதி அடைந்திருக்கின்றனர்.

திருகோணமலை பெரும் பதற்றம் அடைந்திருக்கிறது. இவ்வாறு வீதிகளில் நடமாடும் காடையர்கள் பாரிய வன்முறைகளில் ஈடுபடலாம் என்ற அச்சம்அப்பகுகளில் குடிகொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (லோ)

## திருமலையில் தமிழருக்கு எதிரான தாக்குதல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்

- கண்காணிப்புக்குழுவிற்கு எழிலன் தெரிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

சிறிலங்காப் படையினருடன் இணைந்து ஜே.வி.பி. மற்றும் சிங்களக் காடையர்களால் திருகோணமலையில் ஏற்படுத்தப்பட்ட குழப்பத்தை உடனடியாக நிறுத்த வேண்டும் என இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரிடம் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

திருகோணமலையில் குழப்பத்தை ஏற்படுத்தியவர்கள் ஜே.வி.பி.யினர் தான் இவர்கள் சிங்கள இளைஞர்களை ஒன்று சேர்த்துப் படையினரின் அனுசரணையுடன் நிலமையை மோசமான நிலைக்கு இட்டுச்செல்கின்றனர். இந்தநிலை உடனடியாக நிறுத்தப்படவேண்டும் எனக் கண்காணிப்புக்குழுவின் திருகோணமலை மாவட்ட பிரதிநிதியிடம் நேற்றுக்காலை 11.00மணிக்கும், மாலை ஆறுமணிக்கும் ஆக இரண்டு தடவைகள் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. மேலும் தமிழ் மக்கள் மீதான இத்தகைய தாக்குதல்கள் ஏற்கமுடியாததொன்று எனவே இவை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இல்லையேல் கடந்த காலங்களைப் போன்ற சூழலைத்தான் இது உருவாக்கும். இதுவரை காலமும் திருகோண

(12ஆம் பக்கம் பார்க்க)

## மறு அறிவித்தல் வரை திருமலையில் ஊரடங்கு!

(திருகோணமலை)

திருகோணமலையில் நேற்று நண்பகல் பன்னிரெண்டு மணிக்கு பிறப்பிக்கப்பட்ட பொலிஸ் ஊரடங்குச் சட்டம் மறு அறிவித்தல்வரை தொடருமென திருகோணமலைப் பொலிசார் அறிவித்துள்ளனர்.

இதேவேளை முதலில் வந்த அறிவித்தலில் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் இன்று காலை ஆறு மணியுடன் ஊரடங்குச் சட்டம் நீடிக்கப்படுமென அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## படைத்தளபதிகள் திருமலைக்கு விரைவு!

(திருமலை)

திருமலை நகரையும், அதனை அண்டிய பகுதிகளிலும் பாதுகாப்புப்பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்கெனப் பெருமளவிலான படையினர் குவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை திருமலையில் உருவான பதற்றத்தைத்தொடர்ந்து சனாதிபதி சந்திரிகாவின் பணிப்பின் பெயரில் படைகளின் தலைமை அதிகாரி நவஸ்அட்மிரல், தயா சந்தகிரி மற்றும் இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சாந்தகொட்டேகொட ஆகியோர் திருமலைக்கு விரைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## திருமலைச்சம்பவங்களுக்கும் எமக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது!

**திருமலை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர்**

(திருகோணமலை)

திருகோணமலையில் இடம்பெற்ற சம்பவத்திற்கும் தங்களுக்கும் எதுவித தொடர்பும் இல்லையென திருகோணமலை மாவட்ட அரசியல்துறையினர் விடுத்த அறிக் கையில் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில தினங்களாகப் படையினரும் ஜே.வி.பி.யினரும் மேற்கொண்ட நடவடிக்கைகள் இவ்வாறான சூழ்நிலையை உருவாக்கி உள்ளதாகதெரிவித்துள்ள திருகோணமலை அரசியல் துறைப்பொறுப்பாளர் எழிலன், அவர்கள்தான் நல்லசூழ் நிலையை உருவாக்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் மேலும் கூறியுள்ளார்.

## பொலிசாருக்கு அதிக அதிகாரங்கள் அரசாங்கம் பரிசீலனை

(கொழும்பு)

நாட்டில் நடக்கும்குற்றச் செயல்களைக் குறைப்பதற்குப் பொலிசாருக்குக் கூடுதலான அதிகாரங்களைக் கொடுக்க அரசாங்கம் ஆலோசித்து வருகின்றது.

அதேவேளை பொலிசாருக்கு அதிகளவான அதிகாரத்தைக் கொடுத்தால் தன்னிச்சையாகச் செயற்படத் தொடங்கிவிடுவார்கள். அவ்வாறு பொலிசார் அத்துமீறிச் செயற்படுவார்களாக இருந்தால்

(12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் நேற்று பூரண ஹர்த்தால் இயல்புவாழ்க்கை முற்றாகப் பாதிப்பு!

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் பூரண ஹர்த்தல் அனுஷ்டிக்கப்பட்டதால் அங்கு வழமையான நிலை முற்றாகப் பாதிக்கப்பட்டது.

திருமலை மாவட்டத்தில் மாவீரர் தின வைபவங்களைக் குழப்புவதற்கு பௌத்த சிங்கள பேரினவாத சக்திகள் மேற்கொண்ட முயற்சிகளைக் கண்டித்தும்,

மன்னார், வவுனியா மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் மாவீரர் தின வைபவங்களைக் குழப்புவதற்கு சிறி லங்கா இராணுவம் மேற்கொண்ட சதி நடவடிக்கைகள் மற்றும் பொது மக்கள் மீது மேற்கொண்ட இனவாதவன்முறைகளைக்கண்டித்தும்,

இந்த ஹர்த்தாலுக்கான அழைப்பை திருமலை மாவட்ட தமிழீழ மக்கள் பேரவை விடுத்துள்ளது.

இன்றைய ஹர்த்தால் காரணமாகத் தமிழ்ப் பிரதேசங்களில் பாடசாலைகள் இயங்கவில்லை.

ஊழியர் வரவின்மையினால் அரசாங்க, தனியார் அலுவலகங்கள் அனைத்தும் செயலிழந்துள்ளன.

வியாபார நிலையங்கள், சந்தைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளது. போக்குவரத்து சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.இதன் காரணமாக வீதிகளிலும், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களிலும் வழமையை விட கூடுதலான இராணுவத்தினர் காணப்படுகின்றனர்.

## களுத்துறை சிறையில் மாவீரர்நாள்

களுத்துறைச் சிறைச்சாலையில் மாவீரர் எழுச்சிநாள் நிகழ்வு கைதிகளினால் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டுள்ளன. களுத்துறைச் சிறைச்சாலையில் 36 தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் 40 சுடர்களை அங்கு ஏற்றி மாவீரர்களுக்குத் தமது அஞ்சலியைச் செய்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## வரிவிளம்பரம்

பழமர-மற்றும், மரக்கறி நாற்றுக்களையும் தென்னிலங்கை பயிர்வகைகளையும்- கமுகு, ஒட்டுச் செய்தபலா போன்றவற்றையும் பெற்றுக்கொள்ளலாம். சுஜீதா, பழமரக்கறி நாற்று உற்பத்திப்பண்ணை மு-கந்தசாமி (முரசுமோட்டை) இல.216-புதிய புன்னை நீராவி விசு வமடு. இல 254/2ஆம்பகுதி ஊரியான், முரசுமோட்டை. (5321)


## ப.நோ.கூ.ச கிளை திறப்பு

முத்துஐயன்கட்டு பல நோக்கு கூட்டுறவுச் சங்கக் கிளை 08 திறந்துவைக்கப் பட்டுள்ளது.

இக்கிளை கடந்த 26ஆம் திகதி அன்று கற்சிலைமடுவில் திறந்துவைக்கப்பட்டது. (05)

# கிளிநொச்சியில் சீரற்ற வீதிகளால் வாகனங்கள் குடைசாய்தல் அதிகரிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் பெய்த அடைமழை காரணமாகத் தற்போது நில ஊற்று எடுத்துள்ளதன் விளைவாக போக்குவரத்து வீதிகளில் பயணிக்கும்



பாரஊர்திகள் குடைசாயும் நிலை ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக அண்மையில் கிரவல் கொண்டு புதிதாக புனரமைக்கப்பெற்ற வீதிகளிலேயே பெருமளவு பாரஊர்திகள் தடம் புரண்டுள்ள அவல நிலைமையினை காணக்கூடியதாகவுள்ளது.

வீதிகளின் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளும் பொழுது கற்கள் பதிக்கப்பெறாது கிரவல் மூலம் வீதிகள் புனரமைக்கப்பட்டதன் விளைவாகவே தற்போது ஏற்பட்டுள்ள நில ஊற்றின் காரணமாக மேற்படி வீதியில் பயணிக்கும் பாரஊர்திகள் தடம் புரளும் நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மற்றும் நீர்வழங்கல் அபிவிருத்திஅதிகார சபையினரின் குடிநீர் வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் பொருட்டு வீதிகள் குறுக்கறுத்து வெட்டப்பட்டு குழாய்கள் பொருத்தப்பெற்ற பொழுதிலும் குறிப்பாக அந்தப் பகுதியில் உரிய முறையில் சீர் செய்யப்படாமையின் காரணமாகவே பல பாரஊர்திகள் அப்பகுதிகளில் தடம் புரண்டிருந்தமையினை அவதானிக்கமுடிந்தது.

மேற்படி பணிகளை மேற்கொண்டவர்கள் தகுந்த முறையில் பணிகளை மேற்கொள்ளத் தவறியமையினாலேயே இப்படிப்பட்ட அவலநிலை ஏற்படக் காரணமாக அமைந்துள்ளதென பாரஊர்திகளின் ஓட்டுனர்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி நகரை அண்டிய இப்பணிகள் இடம்பெற்ற பல இடங்களில் பாரஊர்திகள் சில நேற்றும் தடம் புரண்ட நிலையில் இருந்தமையினையும் வாகனங்களை மீட்பதற்காக வாகன ஓட்டுனர்கள் உரிமையாளர்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தமையினையும் அவதானிக்க முடிந்தது. (சோ)

## அறிவமுதின் புதிய நூல்கள் அறிமுக விழா

(அலுவலக செய்தியாளர்)

அறிவமுது பதிப்பகத்தின் புதிய நூல் வெளியீடுகள் அறிவமுது விழா எதிர்வரும் 2 ஆம் திகதி அன்று பிற்பகல் 4.00 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி பேரிகை அமைப்பின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் முனைவர் கோபூரின் மனக்கோலம்,கப்டன்மலரவனின் போர்உலா, ரஷ்யபுதினம் உண்மை மனிதனின் கதை, பண்டிதர் நாட் குறிப்பேடு ஆகிய புதிய வெளியீட்டு நூல்கள் அறிமுகம் செய்துவைக்கப்பெறவுள்ளது. (சோ)


## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கிளிநொச்சி கிளை





## வாகனச் சாரதிகள் தேவை

எமது நிறுவனத்திற்கு சாரதிகள்தேவைப் படுகின்றனர். தகுதியுடையவர்கள் தங்கள் சுயவிபரங்களுடன் சாரதி அனுமதிப்பத்திரத்தின் நிழல்படப் பிரதியுடன் விண்ணப்பங்களை எதிர்வரும் 07.12.2004 இற்கு முன்னர் நேரிலோ தபால் மூலமாகவோ எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

க.கணேஸ்,
கௌரவ செயலாளர்

(சி.10645)


## நெடுங்கேணி–ஒதியமலையில் காண்டீபன் முன்பள்ளி திறப்பு

(ஒட்டுசுட்டான்)

நெடுங்கேணிப் பிரதேசத்தில் உள்ள ஒதியமலைக் கிராமத்தில் காண்டீபன் முன்பள்ளி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 26ஆம் திகதி நெடுங்கேணிப் பிரதேசத்தில் காண்டீபன் முன்பள்ளித் திறப்புவிழா ஒதியமலைக் கிராம முன்னேற்ற சங்கத் தலைவரின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பொதுச் சுடரினை ஒதியமலைக் கிராம அலுவலர் ஏற்ற மங்கல விளக்கை ஒதியமலைப் பாடசாலை அதிபர் ஏற்ற, தேசியக்கொடியினை களமுனை தளபதி சுடர் ஏற்றிவைத்தார். சிலோன் தியேட்டர்பகுதிப் பொறுப்பாளர் வசந்தன் பெயர்ப் பலகையினைத் திரைநீக்கம் செய்துவைத்தார்.

முன்பள்ளி நிலையத்தினை மணலாறு களமுனைத் தளபதி மகேந்தி நாடாவைவெட்டித்திறந்து வைத்தார். (05)

## கசிப்பு விற்றவர் கைது!

(மல்லாவி)

மல்லாவி நகர் சிவபுரம் கற்குவாரி என்னும் இடத்தில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சந்தேக நபர் துணுக்காய் காவல்துறை பணிமனையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். நேற்றிரவு 7.30 மணிக்கு துணுக்காய் காவல் பணிமனையினருக்குக் கிடைத்த தகவலினையடுத்து ஸ்தலத்திற்கு விரைந்த காவல் பணிமனையினர் கைதுசெய்தனர். (24)

-மாணவர் கல்வி மேம்பாடு கருதி-

# பொருண்மிய மதியுரையகத்தால் 9மின்கலத் தொகுதிகள் அன்பளிப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழத் தேசியத்தலைவரின் 50ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு பொருண்மிய மதியுரையகத்தால் ஒட்டுசுட்டான் பொருண்மிய மதியுரையகத்தில் வைத்து மின்சாரவசதியற்ற மாணவர்கள் கல்வியைப் பெறும் பொருட்டு ஒன்பது மின்கலத் தொகுதிகள் கடந்த 26ஆம் திகதியன்று வழங்கப்பெற்றது.

தேசியத்தலைவரின் எண்ணக் கருவான கல்வியை மேம்படுத்தும் வகையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை ஜேர்மன் ரீச்(TECH)ஐ சேர்ந்த வலன்ரைன் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியினை பொருண்மிய மதியுரையக நிறைவேற்றுப் பணிப்பாளர் சி.சுகுணன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து மாவீரர் பொதுப்படத்திற்கான மலர்மாலையினை முல்லை மாவட்டப் பொறுப்பாளரும், 2ஆம் லெப் மாலதியின் திருவுருவப் படத்திற்கான மலர்மாலையினை முல்லை மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளரும் அணிவித்தனர்.

மங்கல விளக்கினை துணுக்காய் வலயக்கல்விக்கழகப் பொறுப்பாளர், பாலிநகர் மகாவித்தியாலய அதிபர் ஆகியோர் ஏற்றிவைக்க சிறப்புரையினை முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர், முல்லை மாவட்ட கல்விக்கழகம் பொறுப்பாளர், துணுக்காய்வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர், ஜேர்மன் தொழிநுட்பக் கல்லூரி பிரதிநிதி ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து பொருண்மிய மதியுரையக நடுவப்பணியகத்தில் வைத்து திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள திலீபன் மருத்துவமனைகளில் மின்சாரவசதியின்மையால் இரவு வேளைகளில் அவசர நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதில் உள்ள சிரமங்களைத் தவிர்க்கும் வகையில் பொருண்மிய மதியுரையகத்தால் மூன்று சூரிய மின்கலங்கள் திலீபன் மருத்துவமனைகளின் நிர்வாகப்பொறுப்பாளர் தமிழ் மாறனிடம் கையளிக்கப்பெற்றது.

நிகழ்வில் பொருண்மிய மதியுரையகப் பணிப்பாளர் சு.சுந்தரமூர்த்தி, கனடா தொழில்நுட்பக் கல்லூரியைச் சேர்ந்த விஸ்வா, லண்டன் ரி.ஆர் தொழில்நுட்பக் கல்லூரியைச் சேர்ந்த ரகு, திருமதி செல்வரட்ணம் ஆகியோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)


## எழுதுனர் தேவை

கிளிநொச்சி எழிலகம் மின்இலத்திரனியல் வாணிப விற்பனை நிலையத்திற்கு எழுதுனர் பதவிக்கான விண்ணப்பம் பின்வரும் தகைமையுடையவர் களிடமிருந்து கோரப் படுகிறது.

அகவை :- 20-40 (இருபாலார்)

தகைமை :- கணக்கியலில் சித்தியடைந்த ஆங்கில அறிவுடையவராக இருத்தல் வேண்டும்.

சம்பளம் :- பேசித்தீர்மானிக்கப்படும் விண்ணப்பங்களை நேரில் 6.12.2004 ஆம் திகதிக்குமுன்பு சமர்ப்பிக்கவும்

எழிலகம்,
புகையிரத நிலையவீதி,
கிளிநொச்சி.

(5322)


## சாவு அறிவித்தல்




### பொன்னையா நாகேந்திரன் (இந்துமாமா)

முரசுமோட்டை 2ஆம் யுனிற்றைப் பிறப்பிடமாகவும் தற்போது மத்திய கல்லூரி முன்பாக இல.21 செல்வாவீதி ஆனந்தபுரத்தில் வசித்து வந்தவருமாகிய நாகேந்திரன் ( இந்து மாமா) 28.11.2004 ஞாயிற்றுக்கிழமை காலமானார் அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி பொன்னையா தம்பதிகளின் புதல்வரும் நாகேஸ்வரி (ஹொலன்ட்) நாகரட்ணராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைச் சகோதரனும் தனபாலசிங்கம் (ஹொலண்ட்) பத்மாவதனி, (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் தயாநிதி(ஹொலண்ட்) தயாளன் (ஹொலண்ட்) தாயாகரன்(ஹொலண்ட்) யசோதினி (கொழும்பு), சயந்தினி (ஹொலண்ட்) ஆகியோரின் அன்பு மாமனாரும், செந்தூரன் (பிரான்ஸ்) கௌசிகன் (பிரான்ஸ்) நரேசன் (பிரான்ஸ்) ஆகியோரின் சிறிய தந்தையுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.11.2004 இன்று செவ்வாய்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்று திருநகர் பொதுமயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

தகவல்:-
திருமதி பகவதி பொன்னம்பலம்.
(மாமியார்)

(4940)



நிர்வாகம் இலாபத்தை மட்டும் கருதி ஊழியர் நலனில் அக்கறை கொள்ளவில்லையென உறவினர் குற்றம் சுமத்தும் நிலையில் சீனாவிலுள்ள நிலக்கரிச் சுரங்கம் ஒன்றில் சிக்கி 141பேர் காணாமற்போன நிலக்கரிச் சுரங்கத்தில் நிலக்கரி ஏற்றப்படுகிறது.

# நிலக்கரிச் சுரங்கத்தில் வெடிவிபத்து

# சீனாவில் 187பேர் உயிரிழப்பு?

(பீஜிங்)

**சீனாவின் நிலக்கரிச் சுரங்கம் ஒன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 187பேர் மூச்சுத்திணறி இறந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவ் விபத்து நடந்தபோது 300 தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.**

சீனாவில் நிலக்கரிச் சுரங்கங்களில் விபத்து ஏற்படுவது அடிக்கடி நடக்கும் சம்பவங்களாகி விட்டன. இப்போது சாங்க்கி பகுதியில் உள்ள ஒரு நிலக்கரிச் சுரங்கத்தில் வெடிவிபத்து ஏற்பட்டுள்ளது. தனியார் நிறுவனம் சார்பில் நடத்தப்படும் இந்த நிலக்கரிச் சுரங்கம் அதிக ஆழத்தில் 8கிலோ மீற்றர் நீளம் வரையில் உள்ளது. விபத்து நடந்தபோது 300 தொழிலாளர்கள் வரை அதில் வேலை செய்து கொண்டிருந்தனர். இவர்களில் 187 பேர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இதில் 100இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் மீட்கப்பட்டு விட்டனர். சுரங்கத்தில் இருந்து தொடர்ந்து கரும்புகை வந்துகொண்டிருப்பதால் 187 தொழிலாளர்களை இன்னும் மீட்க முடியவில்லை. அவர்கள் கதி என்ன என்பது தெரியவில்லை. மூச்சுத்திணறி அவர்கள் உயிர் இழந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. ஆண்டுதோறும் இந்தச் சுரங்கத்தில் இருந்து 23 இலட்சம் தொன் நிலக்கரி வெட்டி எடுக்கப்படுகிறது.

# அமெரிக்க ஹெலன்ஸ் எரிமலை மீண்டும் சீறத் தொடங்கியுள்ளது

(சான்பிரான்சிஸ்கோ)

அமெரிக்காவில் உள்ள செயின்ட் ஹெலன்ஸ் என்று அழைக்கப்படும் எரிமலை மீண்டும் சீறத் தொடங்கியுள்ளது. இதனால் அப்பகுதியில் 3.1 என்ற ரிக்டர் அளவில் நிலநடுக்கமும் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து அமெரிக்க நில அமைப்பியல் ஆராய்ச்சி மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

அமெரிக்காவில் உள்ள செயின்ட ஹெலன்ஸ் எரிமலையில் மீண்டும் சீற்றம் ஏற்படத் தொடங்கியுள்ளது. இதனால் கடந்த ஒக்ரோபர் மாதம் முதல் சிறு சிறு நில நடுக்கமும் ஏற்பட்டு வருகிறது. கடந்த 1980 ஆம் ஆண்டு இந்த எரிமலை கடுமையாக சீற்றம் கொண்டது. இதனால் சுற்றுப்புறப் பகுதியில் வசித்த 57பேர் இறந்தனர். எரிமலையில் இருந்து கிளம்பிய குழம்பு 230 சதுர மைல்கள் தூரம் பரவியது. அதன் பிறகு இந்த எரிமலை இறந்து விட்டதாகவே கருதப்பட்டது. எனினும் தற்போது இந்த எரிமலையில் மீண்டும் சீற்றம் ஏற்பட்டுள்ளது. அதனால் சிறுசிறு நில நடுக்கங்களும் உருவாகி வருகின்றன. இது குறித்து எச்சரிக்கையும் செய்யப்பட்டுள்ளது. எனினும் இந்த எரிமலை முழுவதுமாக சீற்றமடைய இன்னும் சில காலம் ஆகலாம். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



ஈராக்கின் யுசுபியா நகரில் நடத்தியதேடுதலில் ஆயுதங்கள் கண்டு பிடிக்கப்பட்டதையடுத்து அருகிலுள்ள வயல்வெளிகளிலும் தேடுதல் நடத்தும் ஈராக்கிய கமாண்டோக்கள்.

# தலிபான்கள் திடீர் தாக்குதல் ஆப்கானில் மூவர் உயிரிழப்பு


(காந்தகார்)

ஆப்கானிஸ்தானில் அரச சாரா சமூக அமைப்பைச் சேர்ந்தவர்கள் இருவர் உட்பட மூன்று பேர் தலிபான் தீவிரவாதிகளின் தாக்குதலில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். இது குறித்து ‘வாரா’, அரசு சாராத் தொண்டு நிறுவனத்தலைவர் நஜ்முதீன் கூறியதாவது : ஆப்கானிஸ்தான் பராக் மாகாணத்தில் உள்ள டிலாரம் நகரத்தில் 20 இற்கும் மேற்பட்ட தலிபான் தீவிரவாதிகள் பயங்கர ஆயுதங்களுடன் வந்து திடீர் தாக்குதல் நடத்தினர். இதில் தொண்டு நிறுவனத்தின் சார்பில் பணியில் ஈடுபட்டிருந்த காவலர்கள் இருவர் கொல்லப்பட்டனர். அதேபோல் சமூகத்தொண்டு நிறுவனப் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த அரச காவலர் ஒருவர் பலியானார். இவ்வாறு நஜ்முதீன் கூறினார்.



காஷ்மீரில் நேற்றுக்காலை ஏற்பட்ட மூடுபனிக்கு மத்தியில் பயணம் செய்யும் வாசி ஒருவர்.

# மத்தியதர கற்வ் – III ஏவுகணையை பாகிஸ்தான் வெற்றிகரமாகப் பரிசோதித்தது



(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் மத்திய தர பல ஸ்ரிக் அணுவாயுத ஏவுகணையை பரிசேதித்துள்ளது. இது இவ்வருடம் இடம்பெற்ற ஐந்தாவது ஏவுகணைப் பரீட்சார்த்தமாகும். கற்வ்-111 கஸ்ணவி ஏவுகணையின் பரிசோதனை பற்றி இந்தியா உட்பட அயல்நாடுகளிற்கு அறிவிக்கப்பட்டு விட்டதாக பாகிஸ்தன் இராணுவத்தினர் கூறினர்.

இந்தியா, பாகிஸ்தான் பிரதமர்கள் முதற்றடவையாக சமதானப்பேச்சுக்களைச் சந்தித்து ஒரு வாரத்தின் பின் இப்பரீட்சார்த்தம் இடம் பெற்றுள்ளது.

இரு நாடுகளும் வழமையாகத் தமது ஏவுகணைகளைப் பரிசோதிப்பதும், அவதானிப்பதுவும் தற்போதைய சமாதான நடவடிக்கைகளைப் பாதிக்காது என எதிர்பார்க்கப்படுகிறது கற்வ் iii கஸ்ணவி அணுவாயுத ஏவுகணை 290கி.மீ தூரம் செல்லக்கூடியது நாம் இதன் இறுதி வடிவத்தைச் சோதிப்பதற்கே இப பரீட்சார்த்தத்தை மேற் கொண்டோம் என இராணுவப்பேச்சாளர் ஜெனரல் சௌகத் சுல்தான் செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார்.

இது இந்தியாவுடனான சமாதான முன்னெடுப்புகளிற்கு எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்த மாட்டாது எனவும் அவர் தெரிவித்தார். பாகிஸ்தான் இராணுவத்தினர் ஒருஅறிக்கையில் நாட்டின் அணுக் கரு.ஏவுகணைச் செயற்றிட்டம் சமாதான முன்னெடுப்புகளிற்குப் பிரதானமாக இருக்கும் எனவும் பரீட்சார்த்தங்கள் தொடரும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஒக்ரோபர் மாதம் பாகிஸ்தான் ஒரு மத்தியதர அணுவாயுத ஏவுகணையை பரீட்சித்தது. இதனால் இந்தியாவின் நிலைகளை ஆழமாக ஊடுருவித்தாக்கமுடியும் . அப்பொழுது பாகிஸ்தான் அதிகாரிகள் கற்வ்.v கயுரி ஏவுகணையான இது 1500கி.மீ தூரம் செல்லக்கூடியது எனவும் இதன் கருத்து இந்தியாவிற்கு அணுவாயுதச் செய்தியை அனுப்புவதென்பதல்ல எனவும் கூறினார்.

## ரஷ்யாவில் காலாவதியான பாலை அருந்திய 190 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதி

ரஷ்யாவிலுள்ள மூன்று பாலர் பாடசாலை மாணவர்கள் காய்ச்சல், வாந்தி, வயிற்றோட்டம் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதுவரை 190 குழந்தைகள் அனுமதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றன.

பாடசாலை உணவகத்தில் விற்கப்பட்ட காலாவதியான பாலை அருந்தியதனாலேயே இவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக முதற்கட்டச் சோதனையில் தெரிவிக்கப்பட்டது.

எனினும் கடந்த சில காலமாகவே ரஷ்ய பாடசாலைகளில் தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் நிலவிவருவதால் இவ்விடயத்தில் தீவிரவாதிகளின் தலையீடு இருக்குமோ என அச்சம் தெரிவிக்கப்படுகிறது.இதுகுறித்து காவல் துறையினர் மிக விழிப்பாக இருந்து வருகின்றனர்.

# எம்பயர் ஸ்டேட் கட்டடத்திலிருந்து குதித்து அமெரிக்கர் ஒருவர் தற்கொலை

(நியூயோர்க்)

நியூயோர்க் நகரத்தில் உள்ள எம்பயர் ஸ்டேட் கட்டடத்தின் 86ஆவது மாடியில் இருந்து குதித்து ஒருவர் தற்கொலை செய்துகொண்டார். அவரது உடல் கட்டடத்தின் 6ஆவது மாடியின் கூரை மீது விழுந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அவரை அடையாளம் காணப் பொலிசார் முயற்சி செய்துவருகின்றனர். கடந்த 1931இல் இருந்து செயற்பட்டு வரும் எம்பயர் ஸ்டேட் கட்டடதில் இதுவரை 35பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். தற்கொலை செய்துகொண்டவருக்கு 30வயது இருக்கும் என்று நேரில் பார்த்தவர்கள் கூறியுள்ளனர்.


தற்கொலைக்குச் சில நிமிடங்களுக்கு முன் தன்னுடைய வேலை விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்துகொடுத்துவிட்டு அவர் வந்தது விசாரணையில் இருந்து தெரிய வந்தது. நியூயோர்க்கில் மிக உயர்ந்த க்கட்டடமாக இருந்த ‘இரட்டைக் கோபுரம், அல்-ஹைதா தீவிரவாதிகளால் தகர்க்கப்பட்ட பின் தற்போது மிக உயர்ந்த கட்டடமாக எம்பயர் ஸ்டேட் கட்டடம் தான் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# பேச்சுவார்த்தை என்பது ஏமாற்று வேலை அரசின் அழைப்புக்கு மாவோயிஸ்டுகள் மறுப்பு

(காத்மண்டு)

பேச்சுவார்த்தை நடத்த நேபாள அரசு விடுத்த அழைப்பை மாவேயிஸ்ட் தீவிரவாதிகள் ஏற்க மறுத்து விட்டனர்.

நேபாளத்தில் மன்னராட்சியை எதிர்த்து மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் ஆயுதப் போராட்டம் நடத்தி வருகின்றனர். வரும் சனவரி 13 ஆம் திகதிக்குள் பேச்சுவார்த்தை நடத்த வருமாறு நேபாளப் பிரதமர் ஷெர்பகதூர் துபா அழைப்பு விடுத்துள்ளார். குறிப்பிட்ட திகதிக்குள் மாவோயிஸ்ட்டுகள் பேச்சுவார்த்தைக்கு வரவில்லை என்றால் அரசு தேர்தல் நடவடிக்கையில் இறங்கி விடும். என்றும் துபா தெரிவித்து இருந்தார். ஆனால், இதனை ஏற்க மாவோயிஸ்ட்டுக்கள் மறுத்து விட்டனர். இது குறித்து மாவோஷ்ட் தலைவர் பிரசண்டா கூறுகையில் “மிரட்டல் விடுக்கும் தொனியில் இந்த அறிவிப்பைப் பிரதமர் வெளியிட்டுள்ளார். எனவே,பேச்சுவார்த்தை என்பது ஏமாற்று வேலை. இதனை ஏற்றுக்கொள்ளமாட்டோம்.” என்றார்.



பாகிஸ்தான் பரிசோதனை செய்யப்பட்ட நடுத்தர ரக ஏவுகணை.


# ஜேர்மன், மலேசியாவில் உணர்வுடன் தமிழீழ மாவீரர் நாள் நிகழ்வுகள்

## -மக்கள் எழுச்சியுடன் பங்கேற்பு

**தமிழீழ மாவீரர் நாள் தமிழர்கள் வாழும் நாடுகளில் பரவலாக இடம் பெற்று வருகின்றன. அந்த வகையில் மாவீரர் நாளன்று ஜேர்மனியிலும், மலேசியாவிலும் தமிழ் மக்களால் மாவீரர்கள் உணர்வு பூர்வமாக நினைவு கூரப்பட்டனர்.**

தமிழீழ மாவீரர் நாள் 2004 ஜேர்மனியில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. 27ஆம் திகதி சனிக்கிழமை மதியம் 1.00 மணிக்கு எழுச்சி நிகழ்வுகள் அனைத்தும் ஆரம்பமாகின.

எண்ணாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டு மாவீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்தினர். மிகவும் சிறப்பாக நடைபெற்ற இந்நிகழ்வுகள் இரவு 9.00 மணிக்கு தேசியக் கொடியை இறக்க திரண்டிருந்த



ஜேர்மனியில் நடைபெற்ற நிகழ்வு

மதியம் 1.00 மணிக்கு தமிழீழத்தின் தேசியக்கொடி ஏற்றப்பட்டது. 27.12.1987 அன்று கோப்பாயில் இந்திய இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட வீரவேங்கை மதன் என்றழைக்கப்படும் கந்தசாமி சிவானந்தனினதும், 11.05.1996 அன்று ஆனையிறவு முகாம் தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கப்டன் அப்பன் என்றழைக்கப்படும் கந்தசாமி சிவநேசனினதும் தந்தையாராகிய ஆசைப்பிள்ளை கந்தசாமி தேசியக்கொடியை ஏற்றிவைத்தார். எழுச்சிகானங்கள், எழுச்சி நடனங்கள், "யுத்தகாண்டம்" நாட்டிய நாடகம், மேலைத்தேய கலைஞர்கள் வழங்கிய விடுதலைக்கானங்களின் இசை, இசையும் கதையும், சிறுவர்உரை, "சுயத்தை வென்றவன்" நாட்டிய நாடகம், "அணை" தாளஇசைலயம், "எங்கள் தேசம்" நாடகம், தமிழிசை ஆகிய எழுச்சி நிகழ்வுகள் நடைபெற்றன. ஜேர்மனியின் பல பாகங்களில் இருந்தும் மக்களனைவரும் புலிகளின்தாகம் தமிழீழத் தாயகம் என்ற முழக்கப் பாடலை ஒலித்தனர்.

இதேவேளை மலேசியாவில் உணர்வுபூர்வமாக மாவீரர்நாள் அனுஷ்டிக்கப்பட்டது. கடந்த சனிக்கிழமை (27.11.2004) கோலாலம்பூரில் மாவீரர் நாள் நிகழ்வு மிகவும் உணர்வு பூர்வமாக நடைபெற்றது. இந்நிகழ்வில் அகவணக்கம், ஈகச்சுடரேற்றல், மாவீரர் மலர் வணக்கம் ஆகிய நிகழ்வுகளைத் தொடர்ந்து உலகத் தமிழர் நிவாரண நிதி அறங்காவலர் பசுபதி தலைமையில் ஏனைய நிகழ்வுகள் நடைபெற்றன. நிகழ்வில் மலேசிய தமிழ் நெறிக்கழகத்தலைவர் இரா.திருமாவளவன் சிறப்புரையாற்றினார். அத்துடன் கீதாஞ்சலி, அம்பிகா நடனப்பள்ளி மாணவர்கள் தாயகப்பாடல்களுக்கு நடனங்களை வழங்கினர். மலேசிய வாழ் தமிழ் மக்கள் மாவீரர் நாள் நிகழ்வில் உணர்வு பூர்வமாகக் கலந்து கொண்டார்கள்.

### தாமதம் ஏன்?

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இயங்கிவரும் மோட்டார் வாகனப்பதிவு திணைக்கள அலுவலகத்தில் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டு நீண்டகாலமாகியும் அவற்றிற்கான இலக்கத்தகடுகள் வந்து சேராமையால் மக்கள் விசனமடைந்துள்ளனர். (சோ,சு)

# சமூகக்கல்வி பாடத்திற்குப் பதில் புவியியல்,வரலாறு,குடியியல்

## -அடுத்தவருடம் முதல் அறிமுகம்

அரசாங்கப்பாடசாலைகளில் தற்போது போதிக்கப்பட்டுவரும் சமூகக்கல்வி பாடத்திற்குப் பதிலாக புவியியல்,வரலாறு மற்றும் குடியியல் ஆகிய பாடங்களைப் புதிதாக அறிமுகப்படுத்துவதற்கு சிறிலங்காவின் கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கையொன்றினை கல்வி அமைச்சின் செயலாளர் தாராடிமெல் சகல கல்விப்பணிப்பாளர்கள் மற்றும் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார். தரம் 6 தொடக்கம் 11 வரையிலான வகுப்புக்களில் புவியியல், வரலாறு, குடியியல் ஆகிய பாடங்கள் அடுத்த ஆண்டு தொடக்கம் புதிதாகப் போதிக்கப்பட உள்ளன.

தரம் 6 மற்றும் 07 ஆம் வகுப்புகளில் 2005ஆம் ஆண்டு தொடக்கமும், தரம் 8மற்றும் 10ஆம் வகுப்புக்களில் 2006ஆம் ஆண்டு தொடக்கம் தரம் 9மற்றும் 11 ஆம் வகுப்புக்களில் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் புதிய பாடங்கள் போதிகப்படவுள்ளன.

2007ஆம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் முதற்தடவையாக புதிய பாடங்களில் பரீட்சை எழுதவுள்ளனர்.

# ஜெயந்திநகர் முன்பள்ளியை விரைவில் இயக்க ஏற்பாடு

## விசேட ஆணையாளர் தகவல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி ஜெயந்திநகர் முன்பள்ளி அதற்கென ஒதுக்கப்பட்ட காணியில் சனவரிக்கு முன் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிளி. கரைச்சிப் பிரதேச சபையினரால் ஜெயந்தி நகரில் நடாத்தப்படும் முன்பள்ளியின் தற்போதைய நிலை தொடர்பாக கரைச்சிப் பிரதேச விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தனிடம் கேட்டபோது குறிப்பிட்ட முன்பள்ளிக்கென ஜெயந்திநகர் அங்காடிக்கு அருகில் காணி ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் மழை காரணமாக அதற்கான வேலைகள் தாமதித்ததாகவும், எதிர்வரும் சனவரி மாதத்திற்கு முன் குறிப்பிட்ட அக்காணியில் முன்பள்ளி அமைக்கப்பட்டு நிரந்தரமாக ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

மேற்படி முன்பள்ளியில் சுமார் 70 சிறார்கள் கல்வி பயின்று வருகின்ற போதிலும் முன்பள்ளியின் இடநெருக்கடியில் அது செயற்படாத நிலையில் இருந்தமை குறித்து சுட்டிக்காட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(சோ,சு)

# சர்வதேச மாற்று வலுவுள்ளோர் தினத்தை கிளிநொச்சியில் சிறப்புறக் கொண்டாட ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

சர்வதேச மாற்றுவலுவுள்ளோர் தினத்தை கிளிநொச்சியில் மிகவும் சிறப்பான முறையில் கொண்டாட ஏற்பாடாகியுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் மேற்படி நிகழ்வானது வரும் 03.12.2004 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதமவிருந்தினராக மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் மற்றும் கரைச்சிப் பிரதேச விசேடஆணையாளர் பொன்.நித்தியானந்தம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

அன்றையதினம் மாற்று வலுவுள்ள அங்கத்தவர்களை கௌரவிக்கும் நிகழ்ச்சியும் அன்பளிப்புப் பொருட்கள் வழங்கல், கலை நிகழ்ச்சி என்பனவும் இடம்பெறும்.

அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 1825 அங்கத்தவர்களும் இந்தநிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேற்படி நிகழ்வில் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கிளிநொச்சி மாவட்ட ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தினர் வேண்டிநிற்கின்றனர். (கு)

# அம்பாறையில் பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன!

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்யும் அடைமழையினால் பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதோடு, இருவாரங்களுக்கும் மேலாகக் கடல் கொந்தளிப்பாக உள்ளதால் மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை. இதனால் கடல் உணவு களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அம்பாறை மாவட்டத்தில் கடந்த பல வருடங்களுக்குப் பின்பு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

இதுவரை சுமார் 12 ஆயிரம் ஏக்கர் நெல் விதைத்த வயல்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.



பரந்தன் -புதுக்குடியிருப்புப் பிரதான வீதியிலுள்ள வெலிக்கண்டல் பாலம் அவசரமாக புனரமைப்பு செய்யப்பட்ட போதும் பாலத்தின் இரண்டு பக்கங்களும் செப்பனிடப்படாத நிலையில் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிப்பதை படத்தில் காணலாம். (படம்-வரன்)

# ஆரம்ப சுகாதார நிலையத்தை சீராக செயற்படவைக்கத் தடை..?

ஆரம்ப சுகாதார நிலையத்திற்குரிய நிரந்தரக்கட்டடமிருந்தும் அதில் இயங்க முடியாதநிலையில் தற்காலிக கொட்டகையில் ஆரம்ப சுகாதார நிலையம் இயங்குவதால் விசுவமடு றெட்பானா பகுதி மக்கள் பெரும் துன்பங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

றெட்பானாப்பகுதியில் மாணிக்கபுரம், வள்ளுவர்புரம், இளங்கோபுரம் என மூன்று கிராமங்களிலும் வாழும் 1000 வரையான குடும்பங்கள் மிகவும் பின் தங்கிய நிலையிலேயே வாழ்ந்து வருகின்றன. இங்கு ஆரம்ப காலத்தில் றெட்பானா நிறுவனத்தினரால் அமைத்துக் கொடுக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையக்கட்டடத்தை 1997ஆம் ஆண்டு காலப்பகுதியில் பொது அமைப்பொன்று தமது தேவைக்காக பயன்படுத்த ஆரம்பித்ததையடுத்து அங்கு தாதியர் கிளினிக் மற்றும் சுகாதார நடவடிக்கைகள் என்பன ஸ்தம்பிதமடைய குறிப்பிட்ட அமைப்பினரால் தற்காலிக கொட்டகை அமைத்துக் கொடுக்கப்பட்டது. இக்கொட்டகையிலும் கூட போதிய இடவசதியற்ற நிலையிலும் மழை காலங்களில் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்த முடியாத நிலையிலும் மக்களும் தாதியரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இப்பகுதியில் வேறு எந்தவொரு பொதுக் கட்டடங்களுமற்ற நிலையில் பல்வேறு இடர்களுக்கு மத்தியிலும் இத்தற்காலிக கொட்டகையையே பயன்படுத்த வேண்டியிருந்தது.

ஆனால் தற்போது நிரந்தரக் கட்டட செயற்பாடுகள் வேறு இடத்திற்கு நகர்த்தப்பட்ட பின்னும் அதில் ஆரம்ப சுகாதார நிலையத்தை மீள இயங்கவைக்க தயக்கம் காட்டப்படுகிறது. இது தொடர்பாக அப்பகுதி கிராமமட்ட அமைப்புக்கள் முயற்சி மேற்கொண்டுள்ள போதும் எதுவித ஆக்கபூர்வமான பலனும் கிடைக்க வில்லையென கவலை தெரிவிக்கும் அக்கிராமமட்ட அமைப்புக்கள் தற்போது பெய்துவரும் மழை காரணமாக கர்ப்பிணித்தாய்மார் மற்றும் குழந்தைகள், நோயாளிகள் எனப் பலரும் மேற்படி பயன்பாட்டிலுள்ள தற்காலிக கொட்டகை சேதமடைந்ததால் பெரும் இடர்களை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கின்றன. மழையினால் கூரைகள்



சேதமடைந்து மழைநீர் உட்புகுந்து நீர் தேங்கிநிற்கும் அக்கொட்டகையினுள்ளேயே தாதியர் தமது செயற்பாட்டினை மேற்கொண்டு வருகின்றனர்.


எனவே மேற்படி நிரந்தரக் கட்டடத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்தை மீள இயங்க வைக்க நடவடிக்கை எடுத்தால் அதன் சேவைகள் சீரான முறையில் அமையும் என்பது குறிப்பிடத்தக்கது. -சசி

# போர் ஏற்பட்டால் உருவாகும் பேரழிவுக்கு இன்றைய அரசே பதில் சொல்ல வேண்டும்

மலையக மக்கள் முன்னணி தலைவர் எச்சரிக்கை

(கொழும்பு)

**நாட்டில் மீண்டும் போர் ஏற்படுமாயின் அதனால் உருவாகும் பேரழிவுகளுக்கு இன்றைய அரசே பதில் சொல்ல வேண்டுமென மலையக மக்கள் முன்னணி தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சந்திரசேகரன் தெரிவித்தார்.**



புலிகளின் தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரை தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

பிரபாகரன் ஆற்றிய உரை அரசுக்கு எச்சரிக்கை மட்டுமல்ல நாட்டின் எதிர்காலத்திற்கு விடப்பட்ட சவாலாக அமைந்து விடும் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும் புலிகளோடு சமரசத்திற்கு சாத்தியம் இல்லை என்று மக்கள் மத்தியில் பிரசாரப்படுத்தியதோடு புலிகளைப் பயங்கரவாதிகள் என்றும் தோற்றம் காட்ட, கடந்த காலங்களில் பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால் யுத்த நிறுத்தம் சமாதான பேச்சுவார்த்தை என்ற நிலைமை ஏற்பட்டபின் மிகுந்த விட்டுக் கொடுப்போடும் பொறுமையோடும் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக அரசுக்கு வாய்ப்பளித்திருக்கின்றார்கள்.

ஆனால் இன்றைய நிலையில் பாராளுமன்ற ஆசனங்களை அலங்கரிக்கும் அரசியல் கட்சிகளில் பல இனவாதத்தையே தங்களின் அரசியல் வெற்றியின் யுத்தியாக நினைக்கிறார்கள் இந்நிலையில் தலைவர் பிரபாகரனுடைய மாவீரர் தின உரை அரசுக்கு விடப்பட்ட எச்சரிக்கை என்பதை விட இறுதி வாய்ப்பு என்பதாகவே மலையக மக்கள் முன்னணி கருதுகின்றது.

சிறுபான்மை இனத்தின் விடுதலைப் போராட்ட வரலாற்றை புரிந்து கொள்ள முடியாத இனவாத இயக்கமாகிய ஜே.வி.பியுடன் கூட்டு வைத்திருக்கும் வரை சனாதிபதியால் சமாதானத்திற்கான அடுத்த அடியை எடுத்து வைக்க முடியாது என்றே கருதவேண்டியுள்ளதெனவும் தெரிவித்துள்ளார்.

# காலவாய் தோண்டியபோது எறிகணை வெளிவந்தது

### சாவகச்சேரியில் சம்பவம்

(தென்மராட்சி)

சாவகச்சேரியில் இராமலிங்க வீதியில் குடிநீர் குழாய் அமைப்பதற்கு வீதிக்கு அருகில் கால்வாய் தோண்டியபோது வெடிக்காத நிலையில் இருந்த எறிகணை ஒன்று நேற்று முன்தினம் காலை கண்டுபிடிக்கப்பட்டது. இதுகுறித்து வெடிபொருள் அகற்றும் நிறுவனத்துக்கு தகவல் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# க.பொ.த [சா/த] பரீட்சைக்கு 5,01,230 பேர் தோற்றுவர்

(பூநகரி)

இவ்வருடம் டிசம்பர் மாதம் நடைபெற இருக்கும் க.பொ.த (சா/த) பரீட்சைக்கு தனிப்பட்ட பரீட்சார்த்திகள் 126819 உம் பாடசாலைப் பரீட்சார்த்திகள் 374411 உம் ஆக மொத்தம் 501230 பரீட் சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

பரீட்சை நிலையங்கள் 3827 உம் இணைப்பு நிலையங்கள் 528, பிராந்திய சேகரிப்பு நிலையங்கள் 33 இயங்கவுள்ளன. என்பதனை நேற்று கிளி.வலயக் கல்விப் பணிமனையில் நடைபெற்ற பரீட்சை அறிவுறுத்தற் கூட்டத்தில் உதவிப் பரீட்சை ஆணையாளர் தெரிவித்தார்.

இதே பரீட்சை அறிவுறுத்தற் கூட்டம் நேற்று முன்தினம் முல்லைத்தீவில் நடைபெற்றது. இதிலும் உதவிப்பரீட்சை ஆணையாளர் கலந்துகொண்டார். பரீட்சை தொடர்பாக வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிக்கையில் இணைப்பாளர்கள் யாவரும் 11.12.2004 காலை 9.00 மணிக்கு நிலையத்திற்கு சமுகமளிக்க வேண்டும் எனவும் பரீட்சை ஒழுங்காக நடைபெற சகல வழிகளிலும் பரீட்சை ஆணையாளரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் கூறினார். (34)

# மிருசுவில் எட்டுத் தமிழர்கள் படுகொலை வழக்கு கொழும்பு உயர்நீதிமன்ற விசாரணையில் நெருக்கடி!

### -நீதியரசர் கொலையே காரணம்

மிருசுவிற் படுகொலை வழக்குத் தொடர்பான விசாரணை கொழும்பு உயர்நீதிமன்றில் கடந்த 22ஆம் திகதி மீள ஆரம்பிக்கப்படவிருந்தது. இது கொழும்பு உயர்நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேப்பிட்டியவின் கொலையினால் தாமதமாகியுள்ளது என சிறிலங்காவின் சட்டத்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ் வழக்கு விசாரணைகளை பிரதம நீதியரசராக சரத் அம்பேப்பிட்டியவும் புதிதாக நியமிக்கப்பட்ட ஏனைய இரு நீதியரசர்களும் மேற்கொள்ளவிருந்ததனால் கடந்த 22ஆம் திகதி சிறிலங்காவின் சகல நீதி மன்றங்களும் மூடப்பட்டு மேற்படி பிரதம நீதியரசரின் கொலையைக் கண்டித்து நீதியரசர்களும், சட்டவாளர்களும், பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

உயர்நீதிமன்றத்திற்குப் பிரதம நீதியரசர் நியமிக்கப்படுவதுடன் இவ்வழக்கின் மூன்று நீதியரசர்களும் புதியவர்களாக இருப்பர். எனவே இவ்வழக்கு விசாரணை மீண்டும் இந்நீதியரசர்களால் ஆரம்பத்திலிருந்தே முன்னெடுக்கப்பட வேண்டும் எனச் சட்டத்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வழக்கில் மிருசுவிலில் எட்டுக்கிராமவாசிகள் கொலையுட்பட்ட 19 குற்றச்சாட்டுடன் தொடர்புபட்ட 5 சிறிலங்கா இராணுவத்தினர் இனங்காணப்பட்டிருந்த மேற்படி பொதுமக்கள் இராணுவ நடவடிக்கையின் பின் தமது வீடுகளைப்பார்க்கச் சென்றவர்கள் எனவும் இவ்விசாரணை கடந்த வருடம் நடத்தப்பட்டு மேற்படி குற்றஞ்சாட்டப்பட்ட ஒரு இராணுவச்சிப்பாய் ரட்ணநாயக்கவின் மேல் முறையீட்டுடன் இடை நிறுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

-சைவ பரிபாலன சபையால் நடத்தப்பட்ட-

# மாணவர் கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்றோர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் சைவபரிபாலன சபையால ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 125 ஆவது குருபூசை சார்பாக கடந்த 21 ஆம் திகதி நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் பரிசு பெறுவோர் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

முதலாம் பரிசு (தங்கப்பதக்கம்) செல்வி-துவாரகா சிவலிங்கம் (கிளி/இராமநாதபுரம் மகாவித்தியாலயம்) இரண்டாம் பரிசு (வெள்ளிப்பதக்கம்) செல்வி-யமுனா. நாகராசா(யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்) மூன்றாம் பரிசு (வெண்கலப்பதக்கம்) செல்வி- ரிஷிகா.யோகநாதன் (யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி) இவர்களுக்கு எதிர்வரும் 4ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவிருக்கும் ஆறுமுகநாவலர் குரு பூசையில் பரிசுகள் வழங்கபபடவுள்ளன.

# மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் வெளிநாட்டு தபால் பொதிகள் கையாடல்!

### –12 ஊழியர்கள் கைதாகி விசாரணை

(கொழும்பு)

கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் வெளிநாட்டு தபால் பொதி கையாடல் சம்பவம் தொடர்பில் 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்புக்கு வெளியே அமைந்துள்ள தபால் நிலைய ஊழியர்களின் வீடுகளைச் சோதனையிட்டபோது அவர்களின் வீடுகளில் தபால் பொதிகள் காணப்பட்டதையடுத்து அவர்கள் கைது செய்யப்பட்டதாக குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைத் திணைக்கள உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார். கைது செய்யப்பட்டவர்களில் 3 உயர் அதிகாரிகள் அடங்குவதாகவும், தெரிவிக்கப்படுகின்றது. சிறிலங்கா கடற்படையிலிருந்து தப்பிச் சென்ற ஒருவரே தபால் ஊழியர்களுடன் குற்றச் செயலைப் புரிந்துள்ளதாகவும் இத்தாலி, பிரித்தானியா ஆகிய நாடுகளிலிருந்து வரும் பொதிகள் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து கொண்டு வரப்படும் போது இவ்வாறான முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது-

# நீதிபதி கொலை சந்தேக நபர்கள் நால்வரும் சாட்சியினால் நேற்று இனம்காணப்பட்டனர்

(கொழும்பு நிருபர்)

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய மற்றும் அவரது மெய்க்காப்பாளர் ஆகியோரது கொலை தொடர்பாக கைது செய்யப்பட்ட 4 சந்தேக நபர்களும் நேற்று சாட்சியினால் அடையாளம் காட்டப்பட்டார்கள்.

கொழும்பு பிரதம நீதிமன்றத்தில் நீதிபதி சரோஜினி குசேல அபயவர்தனா முன்னிலையில் அடையாள அணிவகுப்பு இன்று மாலை நடைபெற்றபோது, வாடகைக்காரின் சார்தியான சாட்சி துப்பாக்கிப் பிரயோகம் செய்த மாத்தறையைச் சேர்ந்த நிசாந்த உதயகுமார, மாலம்பேயைச் சேர்ந்த சம்பத் துசார விஜயவர்த்தன ஆகியோருடன் வாகனத்தில் பயணம் செய்த தெல்கொடையைச் சேர்ந்த சுஜித் ரோகண மற்றும் கடுவளையைச் சேர்ந்த சுமந்த நிரோசன் ஆகியோரையும் அடையாளம் காட்டினார்.

இதனையடுத்து நீதிபதி சந்தேக நபர்கள் நால்வரையும் எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். ஏனைய சந்தேக நபர்களான ஹல்ஸ்ரொப்பைச் சேர்ந்த எம்.வசந்தகுமார என்பவரையும் அன்றைய தினம் வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிபதி, பிரதான சந்தேக நபரான மொகமட் நவ்பர் (போதைவஸ்து வர்த்தகரும் கொலையின் சூத்திரதாரியும்) என்பவரை புலன் விசாரணை முடிந்த பின்பு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துமாறு குற்றப் புலனாய்வுத் துறையினருக்கு உத்தரவிட்டார். சந்தேக நபர்கள் நீதிமன்றத்திற்கு பலத்த பாதுகாப்பின் மத்தியில் அழைத்து வரப்பட் டார்கள்.

நீதிமன்ற கட்டடத் தொகுதியிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. அடையாள அணிவகுப்பின் போது இவர்கள் சார்பில் எந்தவொரு சட்டத்தரணியும் ஆஜராகவில்லை. குறிப்பிட்ட சந்தேக நபர்கள் மேல்மாகாண சபை உறுப்பினர் நாமல் குணவர்த்தன (சிறில.சு.கட்சி) கொலையுடன் தொடர்புடையவர் என்றும் தற்போது விசாரணையின் போது தகவலொன்று வெளியாகியுள்ளது.

# 7 மாத ஆட்சிக்காலத்தில் வாக்குறுதிகளுக்கு இடமில்லை

### –திலக் கருணாரத்ன

(கொழும்பு)

இந்த அரசு பதவிக்கு வந்து 7மாதங்களாகியும் மக்களுக்கு அளித்த எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை என முன்னாள் சிஹல உறுமய கட்சியின் தலைவரும், ஐ.தே.கட்சியின் களுத்துறை மாவட்ட அமைப்பாளருமான திலக் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

தற்போதைய வாழ்க்கைச் செலவு அதிகரிப்பையும் அரச ஊழியர்களின் 9 மணித்தியால வேலை நேரத்தையும் கண்டித்து நடத்தப்பட்ட கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

சந்திரிகாவுடன் இணைந்து போலி அதிகாரத்தைப் பெற்றுக்கொண்ட ஜே.வி.பியினர் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு உட்படப் பல பிரச்சினைகள் தொடர்பில் அரசுக்கெதிராக குரல் எழுப்ப மறுக்கின்றனர் என்றும் அதனால் தேசபிரேமி இயக்கத்துடன் இணைந்து கூச்சலிடுவதாகவும் அவர் தெரிவித்தார்.

# வடக்கு-கிழக்கில் கார்ப் திட்டத்தின் ஊடாக வீதிப் புனரமைப்புக்கு ரூ.300 கோடி ஒதுக்கீடு

### –மாகாண பிரதம செயலாளர் தகவல்

(திருமலை)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவித்திட்டத்தின் கீழ் வடக்கு-கிழக்கு மாகாண சபையால் நடை முறைப்படுத்தப்பட்டு வரும்"கார்ப்" என அழைக்கப்படும் முரண்பாட்டுப்பிரதேச புனர்வாழ்வு, புனரமைப்புத்திட்டத்தின் கீழ் இம்மாகாணத்தில் உள்ள வீதிகளைப் புனரமைப்பதற்காக 300 கோடி ரூபாவை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கியுள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜன் தெரிவித்தார்.

இதன் மூலம் இம்மாகாணத்தில் உள்ள 250 கிலோமீற்றர் நீளமான வீதிகளும், அவற்றுக்குக் குறுக்காகப் போடப்பட்டுள்ள பாலங்கள், மதகுகள் என்பன மீள் நிர்மாணம் செய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையால் நிர்வாகிக்கப்படாத மாகாண சபையின் நிர்வாகத்தால் பராமரிக்கப்படும் வீதித் திருத்த வேலைகளுக்கே இப்பணம் செலவிடப்படுமென அவர் மேலும் தெரிவித்ததுடன் அம்பாறை, மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு, மாவட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.



# எம்மை நாமே பாதுகாப்போம்!

உலக எயிட்ஸ் தினம் 1998 ஆம் ஆண்டு தொடக்கம் சர்வதேச ரீதியில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. அன்று தொடக்கம் ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு தொனிப் பொருளில் இத்தினம் அனுஷ்டிக்கப்பட்டுவருகின்றது. அந்த வகையில் இந்த ஆண்டில் இதன் தொனிப் பொருள் ''WOMEN,GIRLS HIV AND AIDS'' ஆகும்.

இத்தினம் அனுஷ்டிக்கப்படுவதன் முக்கியமான நோக்கம் எச்.ஐ.வி தாக்கத்தினால் இறப்பவர்களின் எண்ணிக்கை உலகில் அதிகரிப்பதனாலும் இந் நோயை பூரணமாக குணப்படுத்த எந்தவித மருந்துகளும் இதுவரை கண்டு பிடிக்கப் படாமையாலும் எயிட்ஸ் நோய் தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி அவர்களைப் பாதுகாக்கவே இத்தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

## நாளை உலக எயிட்ஸ் தினம்

உலகில் ஆபிரிக்கா கண்டத்திலேயே இதன் தாக்கம் கூடுதலாகவும், அடுத்ததாக தென் கிழக்கு ஆசிய நாடுகளில் இதன் தாக்கம் கூடுதலாகவும் உள்ளது. இந் நோய் முதன் முதலாக ஐக்கிய அமெரிக்காவிலேயே கண்டுபிடிக்கப்பட்டது. கண்டு பிடித்த ஆரம்ப காலங்களில் அபிவிருத்தி அடைந்த நாடுகளிலேயே இந்நோயின் தாக்கம் கூடுதலாகக் காணப்பட்டது. ஆனால் தற்போது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலேயே இதன் தாக்கம் மிகவும் கூடுதலாக காணப்படுகின்றது. அது மட்டுமன்றி மிக வேகமாகவும் அதிகரித்தும் செல்கின்றது. இதற்கு முக்கிய காரணமாக மக்களுக்கு இந்நோய் சம்பந்தமான பூரண விழிப்புணர்வு இன்மையே காரணமெனக் கருதப்படுகின்றது.

2003ஆம் ஆண்டு கணிப்பீட்டின் படி உலகில் எச்.ஐ.வி/ எயிட்சுடன் 40-46 மில்லியன் மக்கள் உள்ளனர் எனவும் இவ் ஆண்டில் மட்டும் புதிதாக 5 மில்லியன் மக்கள் இத்தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் எனவும் இவ்வாணடிலேயே 3 மில்லியன் பேர் இந்நோயால் இறந்துள்ளனர் எனவும் UNAIDS மற்றும் WHO நிறுவனங்கள் கணிப்பிட்டுள்ளன.

இலங்கையில் முதலாவது எச்.ஐ.வியின் தாக்கம் 1986ஆம் ஆண்டு அறியப்பட்டது. இது ஒரு வெளிநாட்டு நபர் ஆகும். ஆனால் 1987 ஆம் ஆண்டு இலங்கை நபர் ஒருவருக்கு எச்.ஐ. வி.யின் தாக்கம் அறியப்பட்டது. இலங்கையில் 1987 தொடங்கி 2004 செப்ரெம்பர் வரை 591 பேர் எச்.ஐ.வி தாக்கத்துடன் இனம் காணப்பட்டுள்ளனர். இதில் ஆண்கள் 346 பேரும், பெண்கள் 245 பேரும் ஆகும். இதில் எயிட்சினால் இறந்தோர் தொகை 129 பேர் ஆகும். அது மட்டுமன்றி இலங்கையில் 54 வெளிநாட்டு நபர்களும் எச்.ஐ.வி தொற்றுடன் இனம் காணப்பட்டுள்ளனர். ஆனால் இலங்கையில் 3500 தொடக்கம் 7200 பேர் எச்.ஐ.வி தாக்கத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கலாம் என கணிப்பிடப்படுகின்றது.

2003 தரவுகளின் படி இலங்கையில் மேல்மாகாணத்துக்கு அடுத்ததாக வடக்கு கிழக்கு பகுதியிலேயே இதன் தாக்கம் கூடுதலாக உள்ளது. இங்கு மொத்தமாக 43 பேர் எச்.ஐ.வி தொற்றுடன் இனங் காணப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் -20 மட்டக்களப்பு -07, திருகோணமலை-06, அம்பாறை-05, முல்லைத்தீவு-02, கிளிநொச்சி-02, வவுனியா-01 கடந்த வருடம் பாலியல் நோய்/ எயிட்ஸ் தடுப்பு வேலைத்திட்ட நிலையத்திலும் 3 பேர் எச்.ஐ.வி தொற்றுடன் இனம் காணப்பட்டுள்ளனர். இதில் ஒருவர் வவுனியா மாவட்டத்திற்கும் மற்றைய இருவரும் கிளிநொச்சி மாவட்டத்திற்கும் உரியவர்கள்.

**இந்நோய் பரவும் முக்கிய முறைகள.**

1. எச்.ஐ.வி தொற்று உள்ளவருடன் பாதுகாப்பற்ற முறையில் பாலியல் தொடர்பு வாய், குதம், யோனிவழியூடாக மேற்கொள்ளும் போது.,

2. எச்.ஐ.வி தொற்றுள்ள குருதி, குருதிப் பதார்த்தங்களில் உறுப்புக்களை பரிசோதிக்காது மற்றவருக்கு மாற்றீடு செய்யும் போது.

3. எச்.ஐ.வி தொற்றுள்ளவர் பாவித்த தோலைத் துளைக்கும் உபகரணங்களை தொற்று நீக்கம் செய்யாது மற்றவர் பாவிக்கும்போது,

4. எச்.ஐ.வி. தொற்றுள்ள தாயிடம் இருந்து பிள்ளைக்கு மூன்று முறைகளில் கடத்தப்படலாம்.



*கர்ப்பமாக இருக்கும்போது,

*பிள்ளை பிறக்கும் போது,

*தாய்ப்பாலூட்டும் போது,

இம்முறைகள் மூலமே இந்நோய் பரவுவதால் எச்.ஐ.வி /எயிட்ஸ் ஏற்பட்டவர்களை தனிமைப்படுத்தவோ, சமுதாயத்தில் இருந்து ஒதுக்கவோ தேவையில்லை. அவர்களுக்கு கருணையும் ஆதரவும் வழங்கவேண்டும். தொற்று ஏற்பட்டவருடன் ஒன்றாக வசித்தல், அவரது மலகூடத்தை பாவித்தல், ஆடைகளைப் பாவித்தல், உணவுக்கோப்பைகளைப் பாவித்தல், ஒரே நீர்த் தடாகத்தில் நீந்துதல், கட்டி அணைத்தல், நுளம்பு கடித்தல், காற்றினால் இந் நோய் பரவாது.

இதன் தாக்கத்துக்குட்பட்டவர்களை பூரணமாக குணப்படுத்த முடியாவிட்டாலும் சில புதிய மருந்துகளின் (Anti retro drugs) சிகிச்சை முறைகள் மூலம் நீண்ட காலத்துக்கு ஆரோக்கியமாக வாழச்செய்யலாம். ஆனால் அவர் எச்.ஐ.வி. தொற்றுடன் இருப்பதுடன் நோயையும் மற்றவருக்கு கடத்துவார். இம்மருந்துகள் வாழ்நாள் முழுவதும் பாவிக்க வேண்டும். அத்துடன் விலைகளும் அதிகம். இதனால் வறுமையான அபி விருத்தி அடைந்து வரும் நாடுகளில் இது முக்கி யமான ஒரு பிரச்சினை யாகும்.

இந்நோயின் ஒரு முக்கியமான பிரச்சினையாக கருதப்படுவது இத்தொற்று ஏற்பட்டவர்களை உடனடியாக கண்டு பிடிக்கமுடியாது. தொற்று ஏற்பட்டு எயிட்ஸ் நோயின் குணம் குறிகளைக் காட்ட 1-10 வருடங்களும் செல்லலாம். இக் காலப்பகுதியில் அவர் மற்றவர்களுக்கு பரப்பக்கூடிய நிலையில் இருப்பார். இந் நோயை உறுதிப்படுத்துவது குருதிப் பரிசோதனை மூலமே தவறான பாதுகாப்பற்ற பாலியல் நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் விரும்பினால் அருகிலுள்ள பாலியல் நோய் சிகிச்சை நிலையங்களில் தங்களை இரகசியமாகவும், இலவசமாகவும் பரிசோதனை செய்து கொள்ளலாம். முடிவுகள் அவர்களுக்கு மட்டுமே அறிவிக்கப்படும்.

**து. சிவாநந்தன்**
(பொது சுகாதாரப் பரிசோதகர் பாலியல் நோய்/ எயிட்ஸ்சிகிச்சை நிலையம் ,பொது வைத்தியசாலை வவுனியா.)

வடக்கு கிழக்கு பகுதியில் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா ஆகிய இடங்களில் பாலியல் நோய் எயிட்ஸ் தடுப்பு வேலைதிட்ட காரியாலயங்கள் வைத்தியசாலைகளில் முழுநேர சிகிச்சை நிலையங்களாக இயங்குகின்றன. இங்கு அனைத்து பாலியல் சம்பந்தமான நோய்களுக்கும் இலவசமாகவும், இரகசியமாகவும் சிகிச்சையும் உளவளத்துணையும் வழங்கப்படுகின்றது.

தற்போதைய தரவுகளின்படி உலகில் 80 வீதமானோருக்கு தகாத பாதுகாப்பற்ற பாலியல் தொடர்பு மூலமே இந்நோய் ஏற்படுகின்றது. எனவே நாம் தகாத பாதுகாப்பற்ற பாலியல் தொடர்பை தவிர்த்து, எம்மை நாமே பாதுகாத்துக் கொள்வோமாக.

---

# தாய்வான் நாட்டு மீன்பிடிக் கப்பலில் மீன்கள் திருடிய இரு இலங்கையர் கைது

(கொழும்பு)

தாய்வான் நாட்டு மீன் பிடிக்கப்பலிலிருந்து மீன்களைத் திருடிய இரு இலங்கை மீனவர்களை கொழும்பு துறைமுகப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

கொழும்பைச் சேர்ந்த இச் சந்தேக நபர்களிடமிருந்து திருடப்பட்ட நூறுகிலோ மீன்களும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அவர்களின் பிளாஸ்ரிக் படகு பொலிசாரால் முடக்கி வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில், இலங்கை கடற்பரப்பில் முன் அனுமதியுடன் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தாய்வான் மீன் பிடிக் கப்பலுக்குள் இரகசியமான முறையில் சென்ற இவர்கள் கப்பலிலிருந்த மீன்களைத் திருடிக்கொண்டு படகில் தப்பி வந்து கொண்டிருந்தனர். அச் சமயம் கப்பலிலிருந்து சிறிலங்கா கடற்படையினருக்கு வழங்கப்பட்டதகவலின் அடிப்படையில் ரோந்தில் ஈடுபட்டிருந்த சிறிலங்கா கடற்படைப் படகின் மூலம் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளுக்காக சந்தேக நபர்கள் துறைமுகப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## அதிரடி மாற்றம்

(கொழும்பு)

ஐ.தே கட்சியின் மாத்தறை மாவட்டத்தின் பிரதான அமைப்பாளராக ரொனிடிமெல்லை எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார்.

இதுவரை காலமும் பதவி வகித்த மகிந்த விஜேசேகரவுக்குத் தெரியாமல் நடைபெற்ற இவ்வதிரடி நடவடிக்கையினால் கட்சி ஆதரவாளர்களிடையே பெரும் எதிர்ப்பு தோன்றியிருப்பதாக கூறப்படுகின்றது

# 2 மில்லியன் கொள்கலன்கள் கொழும்புதுறைமுகத்தில் கையாளல்

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தின் வரலாற்றில் முதற்தடவையாக இரண்டு மில்லியன் கொள்கலன்களைக் கையாளும் இலக்கு தாண்டப் படவுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

இம் மாதத்திற்குள் இவ் இலககை தாண்டி விட முடியுமென சிறிலங்கா துறைமுக அதிகாரசபை நம்பிக்கை தெரிவித்துள்ளது. கொழும்புதுறை முகத்தில் இது வரை 19,76,972 கொள்கலன்களை கையாளும் இலக்கு எய்தப்பட்டுள்ளது. 2003 ஆம் ஆண்டு ஏற்பட்டிருந்த 19,59,336 கொள்கலன்களைக் கையாளும் சாதனை இதன் மூலம் முறியடிக்கப்பட்டுள்ளது.

# வானத்திலிருந்து வீழ்ந்த உலோகத் துண்டு

பொலநறுவை புலத்திகமவில் உள்ள விகாரை ஒன்றின் அருகே கடந்த சனிக்கிழமை விண்கல் ஒன்று வீழ்ந்துள்ளது.

இது உலோக துண்டென ஆரம்ப பாிசோதனைகளின் மூலம் தெரிய வந்துள்ளது. இது வீழ்ந்ததைத் தொடர்ந்து நிலத்தில் சுமார் ஒன்றரை அங்குல குழி ஒன்று ஏற்பட்டுள்ளது. நீலநிற புகையுடன் இவ் விண்கல் வீழ்ந்ததென விகாராதிபதி தெரிவித்துள்ளார்.




# பொல்லாதவன் அல்ல...



கிளென் மெக்ராத் என்ற பெயரை கிரிக்கெட் ரசிகர்களுக்கு அறிமுகம் செய்யத் தேவையில்லை. அவுஸ்திரேலிய அணியின் நம்பிக்கை நட்சத்திரமாக நீண்டகாலமாக கிரிக்கெட் அரங்கில் வலம் வருபவர்.

குறிப்பாக அவுஸ்திரேலிய அணியைப் பொறுத்துத் தனிநபர் சாதனையாளராக நீண்டகாலம் தாக்குப்பிடிப்பது என்பது கடினமான ஒன்று.

நூறு டெஸ்ட் போட்டிகளைத் தாண்டி விளையாடிவரும் மெக்ராத் அவுஸ்திரேலிய அணியில் இருந்து இன்றும் பிரித்துப் பார்க்க முடியாத ஒருவராகவே திகழ்கிறார்.

அவர் பந்து வீசுகின்றார் என்றால் உலகின் எந்த முன்னணி துடுப்பாட்ட வீரராக இருந்தாலும் ஒருகணம் தடுமாறுவது உறுதி.

உலகின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களான சச்சின், லாறா போன்றவர்களை அடிக்கடி ஆட்டமிழக்கச் செய்துள்ள பந்துவீச்சாளர்களில் மெக்ராத் குறிப்பிடத்தக்கவர்.

சமீபத்தில் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் தனது நூறாவது டெஸ்ட் போட்டியை பூர்த்திசெய்த மெக்ராத் உலகின் அதிக டெஸ்ட் விக்கெட்டுக்களை கைப்பற்றியவர்களில் மூன்றாவது இடத்தையும் வகிக்கின்றார்.

1993ஆம் ஆண்டு தனது கன்னி சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கையை ஆரம்பித்த மெக்ராத் அணியின் நம்பிக்கைக்குரியவராகத் திகழ்வதுடன் இன்று வரை ஆரம்பப்பந்துவீச்சாளராக இருந்து அணிக்கு கைகொடுத்து வருகின்றார்.

2003 கிரிக்கெட் பருவகாலத்தில் உபாதைக்குள்ளான மெக்ராத் முதற் தடவையாக நீண்ட ஓய்வொன்றை எடுக்கவேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டார்.

அதன் பின்னர் மீண்டும் இவ்வாண்டு அணிக்குள் பிரவேசித்த அவர், தனது வழமையான பந்துவீச்சுப் பாணியை மாற்றம் செய்ததுடன் வெற்றிகரமாகவும் செயற்பட்டு வருகின்றார்.

அவுஸ்திரேலியாவின் நியூசவுத்வேல்ஸ் மாகாணத்தின் நேரோமைன் எனும் மிகச் சிறிய கிராமத்தில் பிறந்த மெக்ராத் ஆரம்பத்தில் கோல்ப், பாஸ்கற் போல், டென்னிஸ் என்பவற்றில் அதிக அக்கறை காட்டியதாகவும் கிரிக்கெட்டில் அவ்வளவு ஆர்வம் இல்லை எனத் தெரிவிக்கின்றார். காரணம் எங்கள் அணித்தலைவர் அப்போது எனக்கு பந்து வீசும் வாய்ப்புக் கொடுப்பதில்லை. உனக்கு பந்து வீசவே தெரியாது என்று என்னை ஓரம் கட்டிவிடுவார். அதனால் ஏனைய விளையாட்டுக்களிலேயே ஆர்வம் காட்டி வந்தேன்.

பின்னர் டக்ளஸ் வால்டர்ஸ் என்பவரால் இனம் காணப்பட்ட மெக்ராத் சிட்னி சென்று உள்ளூர் போட்டிகளில் கலந்துகொண்டு தனது திறமையை வெளிப்படுத்தினார். இது குறுகிய காலத்தில் சர்வதேச போட்டிக்கான பிரவேசத்தை அவருக்குப் பிரகாசமாக்கியது.

துல்லியமான பந்துவீச்சை மேற்கொண்டு துடுப்பாட்ட வீரருக்கு தொடர்ந்து நெருக்கடியைக் கொடுப்பதன் மூலம் விக்கெட் தானாகக் கிடைக்கும் எனக் கூறும் அவர், இதுவே நான் வெற்றிகரமான பந்துவீச்சாளராக செயற்படக் காரணம் எனவும் தெரிவிக்கின்றார்.

அத்துடன் தனது சக பந்துவீச்சாளரான ஷேசன்கிளாஸ்பி மறுமுனையில் துடுப்பாட்ட வீரருக்கு நெருக்கடியைக் கொடுப்பதும் தனது வேலையை சுலபமாக்கி விடுகிறது என்கிறார்.

ஒவ்வொரு தொடர் தொடங்குவதற்கும் முன்னதாகவே சச்சின்-மெக்ராத் மோதல். லாறா-மெக்ராத் மோதல் எனப் பரபரப்பான விமர்சனம் எழும்பும். இதன் காரணமாகவே எனது பந்துவீச்சை சம்பந்தப்பட்ட துடுப்பாட்ட வீரர்கள் எதிர்கொள்ளும்போது ஒருவேளை நான் சிறப்பாகப் பந்துவீசி ஆட்டமிழக்கச்செய்துவிட்டால் அவ்வளவுதான். அந்தத் தொடர் முழுவதும் சம்பந்தப்பட்ட வீரர் நிதானமிழந்தவராகவே காணப்படுவார். இது எமக்கு அனுகூலமாக அமைந்துவிடுகிறது.

இப்படித்தான் பந்துவீச வேண்டும் என்று எந்த அணிக்கும் வியூகம் வகுப்பது கிடையாது. ஒவ்வொரு அணியிலும் முக்கியமான துடுப்பாட்ட வீரரைக் குறிவைத்து பந்து வீசுவோம். அதில் நட்சத்திர வீரரை முதலில் வெளியேற்றிவிட்டால் அந்த அணியின் மற்றைய வீரர்கள் பலவீனமாகி விடுவர்.

உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரர்கள் பந்து வீச்சாளர்களைத் தமது கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் என்பது போல அவர்களது துடுப்பாட்டம் இருக்கும். அப்போது அவர்களை ஓட்டம் பெறாமல் பந்துவீசுவதிலேயே எனது கவனம் இருக்கும். அதைச் சரியாகச் செய்தேன் என்றால் அது அவர்களுக்கு நெருக்கடியை அதிகரிக்கும் அதைப் பயன்படுத்தி அவர்களை ஆட்டமிழக்கச் செய்துவிடுவேன் என்கிறார்.

சச்சின், லாறா போன்றவர்களுக்கு வேண்டுமென்றே பவுன்சர் பந்துகளை வீசுவேன், அதன் பின் ஓப்ஸ்டம்பிற்கு வெளியே பந்து வீசிப் பார்ப்பேன். அடிக்க வேண்டும் என்று முயற்சி செய்தால் எனக்கு வெற்றிதான். காரணம் ஸ்லிப் திசையில் நிற்கும் எமது வீரர்கள் பெரும்பாலும் பிடியெடுக்கும் வாய்ப்பைக் கை நழுவ விடுவதில்லை. மற்றப்படி இவர்களுக்கு எல்.பி.டபிள்யூ கிளீன் போல்ட் வாய்ப்புகளுக்கு அதிகம் முயற்சிப்பதில்லை என்கிறார்.

ஆடுகளத்தில் பயங்கர ஆக்ரோஷமாகக் காணப்படும் மெக்ராத் மைதானத்திற்கு வெளியே பழகுவதற்கு நான் மிகவும் இனிமையானவன் என்கிறார்.

# மீண்டும் பிரகாசிப்பாரா?

சிறிலங்கா கிரிக்கெட் அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் நீண்டநாள் ஓய்வின் பின்னர் மீண்டும் அணிக்கு திரும்பியுள்ளார்.

இது சிறிலங்கா அணியைப் பொறுத்து மகிழ்ச்சியான விடயமாக அமைந்திருந்தாலும் அணியில் இடம் பெற்றுள்ள ஏனைய சுழற்பந்து வீச்சாளர்களுக்கு கசப்பான ஒன்றாகவே இருக்கும்.



ஏனெனில் முரளிதரன் இல்லாது கடந்த மூன்று மாதங்களில் சிறிலங்கா அணி மோசமான பின்னடைவுகள் எதனையும் எதிர்நோக்கவில்லை. துடுப்பாட்ட வீரர்களின் சிறந்த ஆட்டத்தால் வெற்றி நடைபோட்டு வருகிறது.

இது அணியில் இடம்பெற்றுள்ள சுழற்பந்து வீச்சாளர்களான ரங்கனகேரத், உபுள்சந்தன, லொக்குஆராய்ச்சி போன்றவர்களுக்கு அணியில் தொடர்ந்து நிலைத்திருப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் முரளிதரன் மீண்டும் அணிக்குள் பிரவேசிப்பதால் இவர்களில் இருவருக்கு அணியில் வாய்ப்பு அற்றுப்போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இது அவர்களைப் பொறுத்து கசப்பாக அமையும் என்பதை கூறித்தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதல்ல. இந்த நிலை முரளி பிரகாசிக்க வேண்டிய கட்டாயத்தையும் தவிர்க்க முடியாது ஏற்படுத்தியுள்ளது.

இது மறுபுறம் அணியை மேலும் பலமாக்க உதவுவதாக அமையும் என்பதை யாரும் மறுக்கமுடியாது. நீக்கப்படும் வீரர்களின் இடத்திற்கு துடுப்பாட்ட வீரர்களையோ வேகப் பந்து வீச்சாளர்களையோ ஆடுகளங்களுக்கு ஏற்றவாறு மாற்றியமைக்க உதவும். இது ஒட்டு மொத்தத்தில் அணிக்கே பலம்.

இது ஒருபுறமிருக்கமுரளிதரனின் மீள் வருகை சர்வதேச கிரிக்கெட் அரங்கில் சிறிலங்காவுக்கு பல வெற்றிகளைப் பெற்றுக் கொடுக்குமா என்ற கேள்வியைப் பல மட்டங்களிலும் எதிரொலிக்கச் செய்துள்ளது. உலகில் முன்னணி வேகப்பந்து வீச்சாளர்களை விட முன்னணி துடுப்பாட்ட வீரர்களை அச்சுறுத்தும் வகையில் பந்து வீசும் முரளி மீண்டும் தூஸ்ரா பந்து வீச்சு முறைக்கு தடை நீங்கிய நிலையில் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளமை அவரது பலத்தை மேலும் வலுவாக்கியுள்ளது. இது துடுப்பாட்ட வீரர்களுக்கு சிறுபாதிப்பை ஏற்படுத்தியுள்ள அதேவேளை டெஸ்ட் போட்டியில் அதிக விக்கெட்டை வீழ்த்தியுள்ள ஷேன்வோர்னின் சாதனையை முறியடிப்பதற்கும் இலகுவாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சாதனை நாயகன்

உலக டென்னிஸ் தரப்படுத்தலில் முதலாம் இடத்தை வகிக்கும் றோஜர் பெடரர் அண்மையில் மேலும் ஒரு சாதனையை நிலைநாட்டினார்.

மாஸ்டர்ஸ் கிண்ணத்துக்கான போட்டியில் அவர் லியோன ஹெவிட்டியை வென்றுள்ளதுடன் தொடர்ந்து இரு முறை வெற்றி பெற்ற பெருமையைப் பெறுகிறார். அத்துடன் இறுதிப் போட்டிகள் 13இல் தொடர்ந்து வெற்றிவாகை சூடியமையும் அவருக்குப் பெருமை தேடித் தந்துள்ளது. அவற்றுள் அமெரிக்கஓபன் டென்னிஸ், விம்பிள்டன், அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் என்பனவும் அடங்கும்.



அவர் மாஸ்டர்ஸ் கிண்ணத்தை வென்றது தன்னால் நம்ப முடியாதிருப்பதாகவும் விடுமுறையை மகிழ்ச்சியாகக் கழிக்கலாம் என்றும் தெரிவிக்கிறார்.

23 வயதான சுவிஸ் நாட்டைச் சேர்ந்த பெடரர் இந்த வெற்றியின் மூலம் 1.52 மில்லியன் டொலரை பரிசாகப் பெறுகிறார். அவர் எதென்ஸ் ஒலிம்பிக்கில் 2ஆவது சுற்றிலேயே தூக்கி வீசப்பட்டிருப்பினும் அதன் பின்னர் தொடர்ந்து 17 போட்டிகளில் வென்றார். இதுவரை 80 போட்டிகளில் 74 இல் அவர் வெற்றி பெற்றார். அது வருடத்தின் அதிகூடிய வெற்றியாகக் கணிக்கப்பட்டுள்ளது.

பெடரருக்கு அடுத்தபடியாக அன்டிறொடிக் காணப்படுகிறார். இவர்கள் இருவரும் சமபலம் பெற்றுக் காணப்படுகின்றனர். இதற்கு முன்னர் 1984 ஆம் ஆண்டு ஜோன்மெக்கன்ரோ தனது திறமையை வெளிப்படுத்தினார்.

இது பற்றி பெடரர் கூறுகையில்; இந்த வருடம் தொடர் வெற்றிகள் தமக்குக் கிடைத்தமைக்கு ரொக்கட் வீச்சில் செயற்பட்டதே காரணம் எனத் தெரிவித்துள்ளார். அத்துடன் இவற்றை மீட்டுப்பார்ப்பதற்கே முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கிறார்.

# சீனாவுக்கும் பெருமையுண்டு



கால்பந்தாட்டம் தொடர்பில் சீன நாட்டுக்கும் பெருமை இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. சீனா கால்பந்தாட்டப்போட்டிகளில் கவனம் செலுத்தி சாதனைகளைப் படைக்கவில்லை. எனினும் அது தோன்றியது சீனாவில் என சீன விளையாட்டுத்துறை வரலாற்றாசிரியர் பின்ஹறம் தெரிவித்துள்ளார்.

அவர் எழுதிய "Cuju, Ancient chinese Football" எனும் நூலில் சீனாவில் தற்போது நடைபெறும் சுயூ விளையாட்டு தற்போதைய கால்பந்தாட்டத்தின் தோற்றமே என வாதிட்டுள்ளார். இதனை சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனமும் உத்தியோக பூர்வமாக ஏற்றிருப்பது மேலும் விசேடமாகும். லியு பிஞ்சும் தற்போது கிழக்கு சீன பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானியாவார். சுயூ விளையாட்டுக்களின் வரலாற்றையும் பரிணாமத்தையும் ஆய்வு செய்யும் வரலாற்றாசிரியர் ஆவார். அவர் இதனை 1962ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கிறார். "சுயூ" விளையாட்டில் கோல் பாவிக்கப்படவில்லை என்றும் பந்து பறவைகளின் சிறகுகளைக் கொண்டு நிரப்பப்பட்டிருந்ததாகவும் லியு தெரிவிக்கிறார். சீனாவின் புராணக் கதைகளில் இதுபற்றிக் கூறப்பட்டிருப்பதாக அவர் தெரிவிக்கிறார். (கோல்) வெற்றியிலக்கு இன்றி இது ஆடப்பட்டதால் இது ஜூடோ என அழைக்கப்பட்டதாகவும் பின்னர் ஒரு வெற்றியிலக்கு அமைக்கப்பட்டதாகவும் காலப்போக்கில் இரு வெற்றியிலக்குகள் அமைக்கப்பட்டு இரு பிரிவினராக ஆடினார் என்றும் சீனக் கதைகளில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக ஆய்வாளர் லியு பிஞ்சும் தெரிவித்துள்ளார்.

இவை அக்காலத்தில் மன்னர்களின் விளையாட்டாகவும், பின்னர் இராணுவவீரர்களின் விளையாட்டாகவுமிருந்தது. (கி.பி.618முதல்907) விருத்தியடைந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

# பயங்கர குற்றச்செயல்களைத் தடுக்க சிறிலங்கா அரசாங்கம் தவறிவருகிறது

– மேல்மாகாண மக்கள் முன்னணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

**நாட்டில் அதிகரித்து வரும் கொலைகள், கொள்ளைகள் பாலியல் வல்லுறவுகள், ஆட்கடத்தல்கள் போன்ற பயங்கரமான குற்றச்செயல்களைத் தடுக்க அரசு தவறிவருவதாக மேல்மாகாண மக்கள் முன்னணியின் அமைப்பாளரும், மேல்மாகாண சபை உறுப்பினருமான பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில் முதலில் குற்றச்செயல்களைப் புரியும் பொலிசார்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். பின்பு குற்றவாளிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் பொலிசார் மீதும் கவனம் செலுத்தவேண்டும்.

குற்றவாளிகளின் நடவடிக்கையால் அப்பாவி மக்களே பலியாகி வருகின்றனர். இந்த நிலைமை நாளுக்கு நாள் மோசமாகி வருவதை அரசு அறிந்தும் அறியாமலிருப்பது வேதனைக்குரிய விடயமாகும்.

தற்சமயம் ஆயுதக்குழுக்களும் நாளுக்கு நாள் பெருகி வருகின்றன. எனவே அரசாங்கம் இவற்றைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

## சந்தேகம்

கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேப்பிட்டியாவைக் கொலை செய்த குழுவினரே மாகாணசபை உறுப்பினர் நாமல் குணவர்த்தனவின் கொலையைச் செய்ததாகவும், ஒரு மாகாணசபை உறுப்பினரே இக் கொலையாளிகளிற்கு அத்தனகலவில் உள்ள தனது வீட்டில் தஞ்சமளித்துள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

## பயங்கரவாத சம்பவங்களை ஆராய விசேட செயற்குழு

(கொழும்பு)

நாட்டில் பயங்கரவாத சம்பவங்கள் தினந்தோறும் அதிகரித்து வருகின்றபடியால், இது சம்பந்தமாக ஆராய்ந்து அறிக்கைகள் சமர்ப்பிப்பதற்கு சிறிலங்கா பாராளுமன்றத்தில் விசேட செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் லொக்கு பண்டாரவினால் இக்குழு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் 25 அங்கத்தவர்கள் இடம் பெற்றுள்ளனர். சகல கட்சிகளையும் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் இக்குழுவில் அங்கம் வகிப்பார்கள். இக்குழு விசேட அறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும்.

## உயர்தரத்தில் சித்திபெற்ற 30,000 பேருக்கு வேலைவாய்ப்பு

-சிறிலங்காவின் நிதியமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதரஉயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்ற 30,000 மாணவ மாணவிகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்குவதற்கான விண்ணப்பப்படிவங்களின் விபரங்கள் 2005 ஆம் ஆண்டு சனவரி 1 ஆம் திகதி அரச வர்த்தமானியில் வெளியிடப்படுமென நிதி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் பி.பி. ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

கல்விப் பொதுத் தராதர பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கு முதலில போட்டிப் பரீட்சைகள் நடைபெற்ற பின் அதில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு பின் நடைபெறும் பரீட்சையில் தேர்ச்சி பெற்றால் நியமனம் வழங்கப்படும் என சிறிலங்காவின் நிதி அமைச்சு தீர்மானித்துள்ளது.

## க.பொ.த(சா/த)பரீட்சைக்கு தோற்றும் மாணவருக்கு அடையாள அட்டை வழங்கல்

-கிடைக்கப் பெறாதோர் தொடர்பு கொள்க

(கொழும்பு)

க.பொ.த (சா/த) பரீட்சைக்கு தோற்றவுள்ள பாடசாலை மாணவர்களுக்கான தேசிய அடையாள அட்டைகள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை அடையாள அட்டைகள் கிடைக்காத மாணவர்கள் திணைக்களத்துடன் தொலைபேசி மூலமோ அல்லது நேரிலோ தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுமாறு மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உதவி ஆணையாளர் நியாஸ் -011-2593637, உதவி ஆணையாளர் ஆர்.எஸ். துரைராஜா-011-2593638, உதவி ஆணையாளர் கருணாரத்ன- 011-2593636, உதவி ஆணையாளர் எம்:.கருணா திலக்க பெரேரா-011-2593639, அடையாள அட்டைகள் சம்பந்தமாக பிரச்சினைகள் ஏற்பட்டிருப்பின் மாணவ மாணவிகளின் நலன் கருதி டிசம்பர் மாதம் 4,5,11,12 ஆம் திகதிகளில் அடையாள அட்டை திணைக்களம் இயங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சாரதிகளுக்கு தண்டப்பணம் அதிகரிப்பை நிறுத்தாவிடில் சனவரியில் போராட்டம்

– தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

போக்குவரத்து விதிகளை மீறும் சாரதிகளிடமிருந்து அதிகரிக்கப்பட்ட தண்டப்பணம் அறவிடும் நடைமுறையை உடனடியாக நிறுத்தாவிடின் 2005 ஆம் ஆண்டு சனவரி முதலாம் திகதி முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ண தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டியிலுள்ள பெண்கள் ஆய்வு நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கூறியதாவது,

அரசாங்கம் சமர்ப்பித்துள்ள வரவு செலவுத் திட்டத்தில் தனியார் பேருந்து சாரதி நடத்துநர்களிடமிருந்து இதுவரை காலமும் அறவிடப்பட்டு வந்த தண்டப் பணம் அதிகரிக்கப்பட்டுள்ளதே தவிர தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு எவ்விதமான சலுகைகளும் கிடையாது.

ஆனால் முச்சக்கர வண்டிகளுக்கான வற்வரி நீடிக்கப்பட்டு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் முச்சக்கர வண்டியில் பிரயாணம் செய்பவர்களின் தொகை மிகவும் குறைவானதாகும்.

இந்த நிலையில் தனியார் பேருந்து உரிமையாளர்களை கலந்தாலோசிக்காமல் தயாரிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டமாகவே இதனைக் கருத வேண்டியுள்ளது.

வரவு செலவுத் திட்டம் தயாரிப்பதற்கு முன்னர் பேருந்து உரிமையாளர்களுடன் கலந்தாலோசித்திருந் தால் •இந்த நிலையினை தடுத்திருக்கலாம். அதிகரிக்கப்பட்ட தண்டப் பணத்தை அறவிடாமல் மாற்று வழிமுறைகளைக் கையாளுவதற்கு அரசாங்கத்திற்கு ஒரு மாதகால அவகாசத்தை வழங்கியுள்ளோம்.

மேற்குறிப்பிட்ட பிரச்சினைக்கு உரிய தீர்வு கிடைக்காவிடின் 2005 ஆம் ஆண்டு சனவரி 01 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம் எனத் தெரிவித்துள்ளார்.

## கே-400 ரக கைக்குண்டு வடிகாலிலிருந்து மீட்பு

(கொழும்பு)

பதுளை வினித்தகம என்ற இடத்தில் கே-400 ரக கைக்குண்டொன்றை பதுளைப் பொலிசார் கடந்த திங்களன்று மீட்டுள்ளனர்.

வினித்தகம கிராமவாசி ஒருவரின் மூலமாக கிடைத்த தகவலையடுத்து வடிகால் ஒன்றிலிருந்து பதுளை பொலிசார் இக்கைக்குண்டை மீட்டுள்ளனர். இதுகுறித்து தியத்தலாவை இராணுவ முகாமின் குண்டுகள் செயலிழக்கும் பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டதும் அப்பிரிவினர் உடனடியாக வந்து குண்டை செயலிழக்கச் செய்தனர். இக்குண்டு சம்பந்தமாக மேலதிக விசாரணைகளை பதுளைப் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## திருமணம் முடித்து எட்டுநாட்களில் பணம், நகைகளுடன் கணவன் ஓட்டம்

(கொழும்பு)

திருமணம் முடித்து எட்டு நாட்கள் மாத்திரமே கழிந்த பின் தனது மனைவிக்கு நஞ்சூட்டி அவரிடமிருந்து மூன்று இலட்சம் ரூபா ரொக்கப்பணம் உட்பட தங்க நகைகளை அபகரித்துச் சென்ற நபரை தலாத்துஓயா பொலிசார் தேடி வருகின்றனர்.

கடந்த 23ஆம் திகதி இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. நஞ்சூட்டப்பட்ட பெண் கண்டி போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கண்டி தாலாத்து ஓயா பொலிஸ் பிரிவைச் சேர்ந்த எத்துல்கம பிரதேச வாசியான இந்தப் பெண்ணுக்கு பாலில் நஞ்சு கலந்து ஊட்டியதாகப் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

பத்திரிகையொன்றில் வெளிவந்த மணமகன் தேவை என்ற விளம்பரம் ஒன்றின் ஊடாக பிரஸ்தாப யுவதியைச் சந்தித்து உரையாடிய பின் திருமணம் இடம்பெற்று எட்டு நாட்களின் பின்னர் நகைகளும் பணமும் சந்தேகநபரினால் எடுத்துச் செல்லப்பட்டதாகவும் பாதிப்புக்குள்ளான யுவதி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

யுவதியிடம் இருந்த பணத்துடன் நான்கு தங்க மாலைகள், நான்கு வளையல்கள், ஏழு மோதிரங்கள் என்பன இவ்வாறு எடுத்துச் செல்லப்பட்டிருந்ததாகவும் அந்த யுவதி மேலும் தெரிவித்திருக்கிறார்.


### வாடகைக்கார் உரிமையாளர் கழகம் வன்னி

### உரிமையாளர் பார்வைக்கு

31.12.2003 ஆம் ஆண்டுக்கு முன் வழியனுமதிப் பத்திரம் பெற்று ஊர்தியை பணியில் ஈடுபடுத்தாது தொடர்ந்து எமது கழகத்தில் உறுப்புரிமையைப் பேணிவருவோர் வரும் 15.12.2004 ஆம் நாளுக்கு முன் எமது கழகத்துடன் தொடர்புகொண்டு வழியனுமதிப்பத்திரத்தை மீளப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு :- மேற்படி விடயம் தொடர்பாக தலைவரைச் சந்திக்கும் நாட்கள் 03.12.2004, 10.12.2004 } 10.00-02.00மணி வரை

இறுதிநாள் 15.12.2004

தே.ரூபன்
தலைவர்

(5059)



### வீரவணக்கம்

### 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



தமிழீழ தேசியத் துணைப்படை வீரர்

**பாலசிங்கம் காந்திதாசன்**

*வீரச்சாவு - 30-11-2001*

நி.முகவரி :- மூதூர், திருமலை
த.முகவரி :- 08ஆம் வட்டாரம், சிதம்பரம் குடியிருப்பு, மந்துவில், புதுக்குடியிருப்பு.

30.11.2001 அன்று வெடிவைத்தகல் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான எதிர்பாராத மோதலில் வீரச்சாவடைந்தார். இம் மாவீரருக்கும் இந்நாளில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(5308)

தமிழீழ காவல்துறையின் சிறப்புப்படையணியினர்

# மத்திய பிரதேசத்தில் கோர ரயில் விபத்து

# 12 பயணிகள் உடல் நசுங்கிப் பலி

(சென்னை)

சென்னையில் இருந்து சென்ற ரயில் மோதியதால் தண்டவாளத்தில் நின்று கொண்டிருந்த 12 பயணிகள் உடல் நசுங்கிக் கொல்லப்பட்டனர்.

மத்திய பிரதேச மாநிலத்தில் இந்தத் துயர விபத்து நடந்துள்ளது. நேற்று முன்தினம் நடந்த இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது; சென்னையில் இருந்து உத்தரப்பிரதேச மாநில தலைநகர் லக்னோவுக்கு அதிவேக எக்ஸ்பிரஸ் ரயில் சென்று வருகிறது. மத்திய பிரதேச தலைநகர் போபால் அருகே நேற்று முன்தினம் பகல் 11.30 மணி அளவில் இந்த ரயில் சென்று கொண்டிருந்தது. சுகிசிவானியா என்ற ரயில் நிலையத்தில் சில பயணிகள் கூட்டமாகத் தண்டவாளத்தில் நின்றுகொண்டிருந்தனர். அந்த ரயில் நிலையத்தில் சென்னை -லக்னோ ரயில் நிற்காது என்பதால் வேகமாகச் சென்று கொண்டு இருந்தது.

சற்றுத் தொலைவில் வரும்போது தண்டவாளத்தில் பயணிகள் நிற்பதைப் பார்த்த சென்னை ரயிலின் ஓட்டுநர் அவசர பிறேக் மூலம் ரயிலை நிறுத்த முயன்றார். ஆனால் அதிவேகத்தில் ரயில் வந்ததால் ஓட்டுநரின் முயற்சி பயனளிக்கவில்லை

அந்தப் பயணிகள் மீது ரயில் மோதியதால் 12 பேர் அந்த இடத்திலேயே உடல் நசுங்கியும், துண்டு துண்டாகச் சிதறியும் பலியானார்கள். ஒருவர் படுகாயத்துடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

பலியானவர்களில் பலர் கல்லூரி மாணவர்கள். சாஞ்சி என்ற இடத்தில் நடைபெற்ற புத்தமத விழாவில் கலந்து கொள்வதற்காக பாசஞ்சர் ரயிலில் அவர்கள் போபால் வந்தனர். விபத்து நடந்த போது சென்னை ரயில் சென்ற தண்டவாளம் அருகில் உள்ள மற்றொரு தண்டவாளத்தில் (லூப்லைன்) அந்த பாசஞ்சர் ரயில்



நின்று கொண்டிருந்தது.

அதில் இருந்து இறங்கிய பயணிகளிடையே தகராறு ஏற்பட்டுள்ளது. இதனால் சிலர் அருகில் உள்ள தண்டவாளத்தில் நின்று கொண்டு இருந்த போது இந்தக் கோரவிபத்து நடந்துள்ளது எனத் தெரியவருகிறது.


# இந்திய விமானப் படைக்கு புதிய ரக ஜெட் விமானம்

(புதுடில்லி)

முதன் முதலாக உள்நாட்டில் உருவாக்கப்பட்ட "சுஹாய் 30 ரக ஜெட்'' போர் விமானம் இந்திய விமானப்படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த விமானத்தை ரஷ்ய தொழில்நுட்ப உதவியுடன் ஹிந்துஸ்தான் விமான தொழில் நுட்ப நிறுவனம் உருவாக்கியுள்ளது. இரண்டு இருக்கைகளைக் கொண்ட இந்த விமானத்தை இந்திய விமானப் படையிடம் ஒப்படைக்கும் நிகழ்ச்சி மகாராஸ்டிர மாநிலம் நாசிக் அருகேயுள்ள ஓசாக் விமானப் படைத்தளத்தில் இடம்பெற்றது.

இதன்போது இந்நிகழ்வில் கலந்து கொண்டு பேசிய மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி இந்தியாவிற்கு எந்த நாட்டையும் ஆக்கிரமிக்கும் எண்ணம் இல்லையென்றார். அதேவேளை நாட்டின் ஒரு சிறு பகுதியைக் கூட வேறு யாரும் ஆக்கிரமிப்பதை இந்தியா அனுமதிக்காதென்றும் கூறியுள்ளார்.



மதுரை பெத்தானியாபுரத்தில் ஆட்டுக்கடாச் சண்டை நடந்தது. இதை ஏராளமான பொது மக்கள் கூட்டமாக நின்று வேடிக்கை பார்த்தபோது எடுத்தபடம்.

# இந்தியாவில்வகுப்புக் கலவரங்களை தடுப்பதற்கு புதிய சட்டமூலம்

## உள்துறை அமைச்சர் வசிராஜ்பட்டேல்

"வகுப்புக் கலவரங்களைத் தடுப்பதற்கு புதிய சட்டம் கொண்டுவரப்படும என்று மத்திய உள்துறை மந்திரி சிவராஜ் பட்டேல் அறிவித்தார்."

வகுப்புக் கலவரங்களைத் தடுப்பதற்கு உறுதியான நடவடிக்கை எடுக்க மத்திய அரசு புதிய சட்டம் ஒன்றை தயாரித்து வருகிறது. சாதாரண சட்டம்-ஒழுங்கு பிரச்சினைகளுக்கும் வகுப்புக் கலவரங் களுக்கும் உரிய விளக்கம் குற்றவாளிகளுக்கு விதிக்கப்படும் தண்ட னை, பாதிக்கப்படுகிறவர்களுக்கு வழங்க வேண்டிய நிவாரணம் மற்றும் தனிநீதிமன்றங்கள் அமைப்பது போன்ற அம்சங்கள் இந்தச் சட்டத்தில் இடம்பெறும் என்று பட்டேல் தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில் உள்துறைஅமைச்சகம் தயாரித்த அறிக்கையின் அடிப்படையில் வகுப்புக் கலவரங்ச ளை ஒடுக்குவதற்கான இந்தச்சட்டம் மசோதாவை சட்ட அமைச்சகம் தயாரித்துவருகிறது. இதன்வரைபு நகல்கள் இணையத் தளங்கள் மூலம் வெளியிடப்பட்டு பொதுமக்களின் கருத்துக்கள் கண்டறி யப்படும். அத்துடன் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு நாடு தழுவிய விபர ங்கள் மூலம் மக்களின் கருத்துக்களை அறிவித்த பின் புதிய சட்டத்திற்கு இறுதிவடிவம் கொடுக்கப்படும் என்றார்அவர்.

# மது போதையில் தாலிகட்டவந்த மணமகனை நிராகரித்தார் மணப்பெண்

## கேரளாவில் சம்பவம்

கேரளா மாநிலம் அரூர் பள்ளூருச்சி என்ற இடத்தைச் சேர்ந்தவர் அனில்(வயது28) இவருக்கும் அதே பகுதியைச் சேர்ந்த ஒரு பெண்ணுக்கும் திருமணம் நிச்சயிக் கப்பட்டு நேற்று முன்தினம் காலை 11.50 மணிமுதல் 12.45 மணிக்குள் திருமணம் என்ற முகூர்த்த நேரம் குறிக்கப்பட்டு இருந்தது. இதற் கான திருமண ஏற்பாடுகளும் விமர்சையாகச் செய்யப்பட்டு இருந் தது. ஆனால் குறிப்பிட்ட முகூர்த்த நேரம் நெருங்கிய பிறகும் மணம கனைக் காணவில்லை.

புதுபெண் மணமேடையில் அமரவைக்கப்பட்டு சம்பிரதாய சடங்குகள் நடைபெற்றுக் கொண்டு இருந்தன. அப்போது நண்பர் களுடன் குடிபோதையில் வந்த மண மகன் அனில் தள்ளாடியபடியே மணமேடைக்குச் சென்று மாலை யைக் கழுத்தில் போட்டுக் கொண்டு புதுப்பெண் கழுத்தில் தாலி கட்டச் சென்றார்.நான்குபேருக்கு முன்னால் கணவனாக வரவேண்டிய கணவன் மதிப்பிழந்த குடிமகனாக இருப்பதைக் கண்டு மனம் வெதும் பிய புதுப்பெண் ஆவேசம் அடைந் தார். 'அவர் எனக்கு இவரைக் திரு மணம் செய்ய விருப்பமில்லை" என்று மணமேடையில் இருந்து எழுந்து சென்று விட்டார்.

இதனால் ஆத்திரம் அடைந்த மணமகனும் அவரது குடும்பத் தினரும் தகராறில் ஈடுபட்டனர். உடனே இது பற்றி பொலிசில் புகார் செய்யப்பட்டது. உடனே சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற பொலிசார் மணமகன் வீட்டாரைக் கண்டித்து அனுப்பி வைத்தனர். இந்தச் சம்பவம் போதையில் மிதக்கும் இளைஞர் களுக்கு ஒரு சவுக்கடிச் சம்பவம் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

# கேரளாவில் கோர வீதிவிபத்து 5 வாலிபர்கள் உடல் நசுங்கிப் பலி

கேரள மாநிலம் பெரம்பி என்ற இடத்தில் உள்ள பாலிடெக்னிக் பஸ் நிறுத்தம் அருகே நேற்று முன்தினம் ஒரு பாரஊர்தியும் காரும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது. இதில் காரில் சுற்றுலாச்சென்ற 5 வலிபர்கள் உடல் நசுங்கிப் பரிதாபகரமாக இறந்தனர். இவர்கள் அனைவரும் கேரளமாநிலம் கண்ணூர் கலை என்ற இடத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார் கள்.இந்த விபத்துப் பற்றிய தகவல் கிடைத்ததும் சாலக்குடி பொலிசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர். பலியான உடல்கள் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டது. இந்த விபத்துக் காரணமாக அங்கு போக்குவ[illegible] பாதிக்கப்பட்டது.

# மூன்று நாள் பயணமாக பிரதமர் மன்மோகன் சிங் லாவோஸ் சென்றார்

(புதுடில்லி)

ஆசியான் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரதமர் மன்மோகன் சிங் நேற்று முன்தினம் லாவோஸ் சென்றார். இன்று, அவர் சீனப் பிரதமரைச் சந்தித்துப் பேசுகின்றார்.

ஆசியக் கண்டத்தின் தென் கிழக்குப் பகுதியில் உள்ள நாடுகள் ஒன்று சேர்ந்து 'ஆசியான்' என்ற கூட்டமைப்பை நடத்தி வருகின் றன. இதில் புருனே, இந்தோனே சியா, மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், கம்போடியா, லாவோஸ், மியான் மார் வியட்னாம், ஆகிய 10 நாடுகள் இடம்பெற்றுள்ளன.

இந்தியா-ஆசியான் அமைப்பு இணைந்து நடத்தும் 3 நாள் மாநாடு லாவோசில் உள்ள வியன் டியன் நகரில் நேற்று முன்தினம் தொடங்கியது.

மாநாட்டில் கலந்து கொள்ள பிரதமர் மன்மோகன் சிங் நேற்று முன்தினம் தனி விமானத்தில் லாவோஸ் சென்றார். வியன்டியன் விமான நிலையத்தில் அவருக்கு சிவப்பு கம்பள வரவேற்பு கொடுக் கப்பட்டது. வரவேற்பு முடிந்ததும் அவர் தனி பங்களாவில் சென்று



லாவோஸ் நாட்டிற்கு சுற்றுபயணம் மேற்கொண்டுள்ளபிரதமர் மன்மோகன் சிங்கிற்கு அந்நாட்டு விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப் பட்டது.

தங்கினார்.

மாநாட்டின் முக்கிய நோக்கம் ஆசியான் அமைப்புக்கும், இந்தி யாவுக்கும் இடையே உள்ள நட்புறவை மேலும் வலுப்படுத் துவது ஆகும். இரு தரப்புக்கும் இடையே அடுத்த 3 ஆண்டுகளில் வர்த்தகத் தொடர்பை மேம்படுத்த முக்கிய முடிவுகள் எடுக்கப்படுகின் றன. அத்துடன் இந்தியப் பிரதமர் இன்று சீனப் பிரதமர் ஜியா யோவைச் சந்திப்பார் என தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. லாவோஸ் நாட்டிற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு அந்நாட்டு விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

# எயிட்ஸ் நோயைக் கட்டுப்படுத்த ஆந்திராவில் புதிய திட்டம்

# ஒவ்வொரு மதுப்போத்தலுடனும் ஒவ்வொரு ஆணுறை இலவசம்

எயிட்ஸ் எனும் உயிர்கொல்லி நோய் உலக நாடுகளிடையே வேகமாகப் பரவி வருகின்றது. பாதுகாப்பற்ற உறவே எயிட்ஸ் பரவக்காரணம் இதைத் தடுக்க நாடு முழுவதும் எயிட்ஸ் விழிப்புணர்வு பிரசாரம் செய்யப்படுகின்றது.

வருகின்ற டிசம்பர் 1ஆம் திகதி உலக எயிட்ஸ் தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது. இதையொட்டி ஆந்திர மாநில அரசு எயிட்சைக் கட்டுப்படுத்த புதிய திட்டத்தை அறிவித்துள்ளது.

அதன்படி மதுப்பிரியர்களிடையே எய்ட்ஸ் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக மதுக்கடைகளில் ஒவ்வொரு மது போத்தலுடன் ஒரு ஆணுறை இலவசமாக வழங்கப்படும். இதற்காக அனைத்து மதுக்கடைகளுக்கும் தேவையான அளவுக்கு ஆணுறைகள் அனுப்பப்பட்டு உள்ளன. இது குறித்து எயிட்ஸ் கட்டுப்பாட்டு மையத் தலைவி தமயந்தி கூறுகையில்; மதுப் பிரியர்களிடையே பாதுகாப்பற்ற உறவு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காகவே மதுக்கடைகள் மூலம் ஆணுறை விநியோகிக்கும் முறை நடைமுறையில் உள்ளது. தற்போது 1ஆம் திகதி முதல் பெரிய நகரங்களுக்கும் விரிவு படுத்தப்படுகின்றது.

எயிட்ஸ் நோய் பரவுவதில் உலகில் இந்தியா 2ஆவது இடத்தில் உள்ளது. இந்தியாவைப் பொறுத்தவரையில் மராட்டிய மாநிலம் முதலிடத் திலும் ஆந்திரா இரண்டாம் இடத்திலும் உள்ளது. மராட்டியத்தில் எயிட்ஸ் நோயால் 7 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆந்திராவில் 4 இலட்சத்து 70 ஆயிரம் எயிட்ஸ் நோயாளிகள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கொல்கத்தா டெஸ்ட் கிரிக்கெட் போட்டி

# 305 ஓட்டங்களுடன் சுருண்டது தென்னாபிரிக்கா



இந்திய-தென்னாபிக்கா அணிகளுக்கிடையில் கொல்கத்தாவில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டநேரமுடிவின் போது தனது முதல் இன்னிங்சிற்காக துடுப்பெடுத்தாடும் இந்திய அணி ஒரு விக்கெட்டை இழந்து 129 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

சேவாக் 82ஓட்டங்களுடனும், ராவிட் 33ஓட்டங்களுடனும்ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர். கவுதம் கம்பீர் 7ஓட்டங்களுடன் ஷேன்பொலக்கின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

முன்னதாக முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா முதல்இன்னிங்சில் 305ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் கலிஸ் 121ஓட்டங்களையும் ருடெல்ப் 61ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றனர்.

பந்துவீச்சில் சஹீர்ஹான், இர்பான் பதான் தலா 3விக்கெட்டுக்களையும், ஹர்பஜன்சிங் 2விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.

# அவுஸ்ரே லிய அணி அபார பந்துவீச்சு தோல்வியின் விளிம்பில் நியூசிலாந்து



அவுஸ்ரேலியா,நியூசிலாந்து அணிகளுக்கிடையில் அடிலேட்டில் நடைபெற்றுவரும் இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி இக்கட்டான நிலையை அடைந்துள்ளது.

அவுஸ்திரேலியா நிர்ணயித்த 466 ஓட்ட வெற்றிஇலக்கை நோக்கித் தனது இரண்டாவது இன்னிங்சைஆடும் நியூசிலாந்து நேற்றைய 4ஆம் நாள் ஆட்ட முடிவின் போது 5விக்கெட்டை இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

துடுப்பாட்டத்தில் ஓரம் 40,மக்கலம் 54 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காது உள் ளனர்.

பந்து வீச்சில் கஷ்பரோவிக், கிளெஸ்பி, மெக்ராத்,வோர்ன், லீமன்,தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

அவுஸ்திரேலியா முதல் இன்னிங்ஸ் 575 ஓட்டம்,நியூசிலாந்து முதல் இன்னிங்ஸ் - 251 ஓட்டம் அவுஸ்திரேலியா இரண்டாவது இன்னிங்ஸ் இரண்டு விக்கெட்டை இழந்து 139 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. இன்று போட்டியின் இறுதி நாளாகும்.



அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் உலக கோப்பை நீச்சல் போட்டி நடக்கிறது. நேற்றுமுன் தினம் நடந்த ஆண்களுக்கான 100மீ.பட்டர்பிளை இறுதிப் போட்டியில் பிரிட்டனின் ஜேம்ஸ் ஹிக்மேன் முதல் இடத்தைக் கைப்பற்றினார்.

# சிம்பாவ்வேக்கு எதிரான ஒருநாள் போட்டி இங்கிலாந்துக்கு ஐந்து விக்கெட் வெற்றி




சிம்பாப்வேக்கு எதிரான முதல் ஒரு நாள் போட்டியில் இங்கிலாந்து ஐந்து விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

ஐந்து போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரின்முதல் போட்டி ஹராரே நகரில் நேற்று முன்தினம் நடந்தது ஹர்மீசன், பிளின்டொப் மார்கஸ் டிரஸ்கோதிக் போன்ற முன்னணி வீரர்கள் இன்றிக் களமிறங்கிய இங்கிலாந்து, நாணயச் சுழற்சியில் வென்று களத்தடுப்பை தேர்வு செய்தது.

சிம்பாப்வே அணியின் முன் வரிசை ஆட்டக்காரர்கள் சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர். டெய்லர் (17) மட்சி கென்சியேரி (14) சிபாண்டா (6) வெர்மூலன் (11) தைபு (5) ஆகியோர் விரைவில் ஆட்டமிழக்க இந்த அணி 90 ஓட்டங்களில் 5 விக்கெட்டுகளை இழந்தது. சிகும்புரா(52)இப்ராகிம் (45) இணைந்து அணியை மீட்டனர். 49.3 ஓவர்களில் 195 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

வெற்றிக்கு 196 ஓட்டங்கள் என்ற இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து துவக்க ஆட்டக்காரர் சோலங்கி விக்கொட்டை விரைவில் இழந்தது. புதுமுகவீரர் பெல், அணித்தலைவர் மைக்கல் வோர்ன் இணைந்து அணிக்குச் கைகொடுத்தனர். இருவரும் இரண்டாவது விக்கெட்டுக்கு 111 ஓட்டங்கள் சேர்த்தனர். பெல் (75) வோர்ன் (56) ஆட்டமிழந்ததும், இங்கிலாந்து அணிக்கு சரிவு ஏற்பட்டது. ஆன்ட்ருஸ்ட்ரோஸ் (8) காலிங்வூட் (1)ஓட்டங்களில் அடுத்து ஆட்டமிழந்தனர். பின்னர் பீட்டர்சன் (27), ஜோன்ஸ் (7)இணைந்து அணியைவெற்றிக்கு அழைத்துச் சென்றனர். இங்கிலாந்து அணி 47.4 ஓவர்களில் வெற்றி இலக்கை அடைந்தது.



## ஹெய்டன் சாதனை



அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் மாத்யூ ஹெய்டன் (வயது33) தொடர்ந்து 4 ஆண்டுகளாக ஆண்டு தோறும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஓட்டங்களைக் குவித்துசாதனை படைத்துள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இத்தகைய சாதனைபுரிந்துள்ள முதலாவது வீரர் இவர்.

அடிலெடில் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற நியூசிலாந்து அணிக்கு எதிரான ஆட்டத்தில் 10 ஓட்டம் சேர்த்தபோது இச்சாதனையை நிகழ்த்தினார். 21 ஓட்டம் சேர்த்த நிலையில் ஆட்டமிழக்காமல் இருந்தார். முன்னதாக 2001இல் 1,391 ஓட்டங்களும் 2002இல் 1,160 ஓட்டங்களும் ,2003இல் 1,312 ஓட்டங்களும் சேர்த்திருந்தார் ஹெய்டன்.


# நல்ல ஆடுகளம் அமைக்கப்பட்டாலே டெஸ்ட் போட்டி விறுவிறுப்பைத்தரும்



-பொலக்

கொல்கத்தா டெஸ்ட்ஙங்கள் இரு அணிகளுக்குமே முக்கியமானது இங்கு வென்றால், டெஸ்ட் தொடரைக் கைப்பற்றி விடலாம் என்பதால் இரு அணி வீரர்களும் கடுமையாகப் பயிற்சி செய்திருக்கிறோம். கொல்கத்தா, ஈடன் கார்டன் மைதானம் பற்றி நான் நிறையக் கேள்விப் பட்டிருக்கிறேன் என்றாலும் அதிகம் இங்கு விளையாடியதில்லை.என்கிறார் தென்னாபிரிக்க பந்து வீச்சாளர் ஷென்பொலக் போட்டி தொடங்கும் முன்னதாக சச்சின் டெண்டுல்கரிடம் பேசிக் கொண்டிருந்தேன். கொல்கத்தா ரசிகர்கள் கிரிக்கெட் மீது வைத்துள்ள அன்பு, வெறி பற்றி அப்போதுதான் கொஞ்சம் தெரிந்துகொண்டேன். நேற்று முன்தினம் ஆட்டம் தொடங்கியதும், அதை அனுபவபூர்வமாக உணரவும் முடிந்தது. பொதுவாக டெஸ்ட் போட்டிகள் மீதான ஆர்வம் நாளுக்கு நாள் குறைந்து வருவதாகக் கருத்து உள்ளது.

ஆம் இது ஒருநாள் போட்டிகளுக்கான காலம். அதுவும் போரடிக்கிறது என்று பரிசோதனை முயற்சியாக 20/20ஓவர் போட்டிகள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நல்ல ஆடுகளம் அமைக்கப்படும் பட்சத்தில், டெஸ்ட் போட்டிக்கு இணையான விறுவிறுப்பு வேறு எங்கும் கிடைக்காது என்பதே எனது கருத்து.வேகப்பந்து வீச்சாளர் என்ற முறையில், வேகப்பந்துக்குச் சாதகமாக பவுன்ஸ் எழும்பும் ஆடுகளமே நல்ல ஆடுகளம் என நான் நினைக்கலாம். ஒரு ஸ்பின் பந்து வீச்சாளர் பார்வையில் இது வேறு மாதிரியாகவும் இருக்கும். ஆனால் ஐந்து நாளுக்குள் முடிவு தரக் கூடியதே நல்ல ஆடு களம். சமநிலையில் முடியும் போட்டி, ரசிகர்களை மட்டுமல்ல, விளையாடும் வீரர்களுக்கும் ஏமாற்றமே. அந்த வகையில் ஈடன் கார்டன் ஆடுகளம், நல்ல ஆடுகளமாக இருக்கும் என நம்புகிறேன் என்றார்.




அமெரிக்காவின் லாஸ் வேகாஸ் நகரில் நேற்று முன்தினம் நடந்த உலகக் குத்துச்சண்டைபோட்டியில்மெக்சிக்கோவின் மார்கோ ஆன்டனியோ (வலது) [illegible], நாட்டு வீரரான எரிக் மோராலசை எதிர்த்து மோதினார் இதில் 12ஆவது சுற்றில் ஆன்டனியோ வெற்றி பெற்றார்.



பெடரேசன் கோப்பை பெண்கள் டென்னிஸ் இறுதிப் போட்டியில் ரஷ்யா 3-2 என்ற கணக்கில் பிரான்சை வென்று சம்பியன் பட்டம் பெற்றது. ரஷ்ய வீராங்கனைகள் ஜவானேரவா, அனஸ்டசியா, எலீனா ஆகியோருடன் அந்நாட்டு முன்னாள் அதிபர் போரிஸ்யெல்ட்சின் இருப்பதை படத்தில் காணலாம்.

## விளையாட்டு

### ஆனந்த் சம்பியன்

எஸ்டோர்னியா நாட்டில் நடந்த செஸ் போட்டியில் இந்திய கிராண்ட்மாஸ்டரும், உலகின் இரண்டாம் நிலை வீரருமான விசுவநாதன் ஆனந்த் சம்பியன் பட்டம் பெற்றார்.

அவர் 5 சுற்றிலும் வென்று 5 புள்ளிகளைப் பெற்றார். ரஷ்ய வீரர் காலிப்மேன் 3 புள்ளிகள் பெற்று 2ஆவது இடத்தையும், லோபிரான் (ஜேர்மனி) 2.5 புள்ளிகள் பெற்று 3-ஆவது இடத்தையும் பிடித்தனர்.

வெற்றி பெற்றவர்களுடன் சென்னை மோட்டார் ஸ்போர்ட்ஸ் கிளப் சேர்மன்முத்துகிருஷ்ணன்.

## அணிக்கு திரும்பியவுடன்

# விக்கெட் வீழ்ந்தது மகிழ்ச்சியாய் உள்ளது




பதான்

அணிக்குத் திரும்பிய வேகத்தில் விக்கெட்டுகளை சாய்த்துள்ளது மகிழ்ச்சி அளிப்பதாக இருக்கிறது என்று இர்பான் பதான் தெரிவித்துள்ளார்.

தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான கொல்கத்தா டெஸ்ட் போட்டியில்இந்திய வேகப் பந்து வீச்சாளர் இர்பான் பதான் முதல்நாளில் 3விக்கெட்டுகள் சாய்த்தார். காயம் காரணமாக சமீபத்தில் நடந்த 3 டெஸ்ட் போட்டியில் இர்பான் ஆடவில்லை. அணிக்கு திரும்பிய வேகத்தில் விக்கெட்டுகளைச் சாய்த்துள்ளது. மகிழ்ச்சி அளிப்பதாக இருக்கிறது என்று இர்பான் பதான் நிருபர்களிடம் கூறினார்.

மேலும் அவர் கூறுகையில்; இந்தப்போட்டியில் என்னால் ரிவர்ஸ் சுவிங் முறையில் சிறப்பாக பந்து வீச முடிந்தது. இது புதிய தெம்பு கொடுத்துள்ளது. அதுவுமில்லாமல் விக்கெட்டுகளைக் கைப்பற்றி இருப்பது இரட்டிப்பு சந்தோஷம் அளிக்கிறது. இருந்தாலும் இனிவரும் காலங்களில் என்னுடைய பந்து வீச்சின் தரத்[illegible] உயர்த்த வேண்டும் இதற்காக நான் அதிகமாக முயற்சி செய்[illegible]கிறேன் என்றார்.



### சிந்தனைக்கு

இனத்துவேச அரசியல் சேற்றில் சிங்கள தேசம் மூழ்கிக்கிடக்கும் வரை, தமிழரின் தேசிய அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் ஒரு நீதியான-நியாயபூர்வமான-அரசியல் தீர்வை, நாம் சிங்கள ஆளும் வர்க்கத்திடமிருந்து எதிர்பார்க்க முடியாது.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 30-11-2004

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com


## கை நழுவும் சந்தர்ப்பம்!

அரசியல் ரீதியான விபத்தோ அன்றி அதிர்ஷ்டமே சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கொள்ளும் சமாதான முயற்சிகளுக்கு எதிர்க்கட்சியினர் குறிப்பாக ஐ.தே.கட்சியும் அதன் தலைமையும் ஆதரவு தெரிவித்திருந்தது. இது இலங்கையின் அரசியல் வரலாற்றில் என்றும் நிகழாத அரியதொரு நிகழ்வெனில் மிகையாகாது. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி வழங்குவதாக அறிவித்த ஆதரவு நிலைப்பாட்டில் இருந்து அது பின்வாங்கப் போவதாக தற்பொழுது வெளியாகிக் கொண்டிருக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறானதொரு முடிவிற்கு ஐ.தே.கட்சி வருவதற்கு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசியல் நடவடிக்கைகளே காரணம் எனக் குற்றம் சாட்டப்படுகிறது. அதாவது ஐ.தே.கட்சி வழங்குவதாக உறுதியளித்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு சனாதிபதி சந்திரிகா இனப்பிரச்சினைக்கு சமாதான முயற்சிகள் எதையும் முன்னெடுத்ததாக இல்லை. மாறாக ஐ.தே கட்சிக்குள் பிளவை ஏற்படுத்தி, தமது ஆட்சி அதிகாரத்தை நிலை நிறுத்த முற்படுவதே ஐ.தே கட்சி தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்வதற்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

ஐ.தே கட்சியின் குற்றச்சாட்டில் உண்மை இல்லாமலும் இல்லை. சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைப் பொறுத்து ஒரே இலக்காக இருப்பது ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதும், தனது பதவிக்காலத்தை ஏதோ ஒரு வகையில் நீடிப்புச் செய்வதுமே ஆகும். இதற்கு ஐ.தே கட்சி சமாதானத்திற்கு வழங்குவதாகத் தெரிவித்த ஒத்துழைப்பு பயன்படப் போவதில்லை. இதற்குப் பாராளுமன்றத்தில் அறுதியானதும், உறுதியானதுமான பெரும்பான்மை தேவை ஆகும். அத்தோடு பாராளுமன்றத்தை வழி நடத்தும் சபாநாயகர் பதவியும் அவசியமாகும்.

அதாவது ஐ.தே கட்சி சனாதிபதி ஆட்சி முறை மாற்றத்திற்கோ அன்றி சனாதிபதி சந்திரிகாவின் சனாதிபதி நீடிப்பிற்கான நடவடிக்கைக்கோ ஒத்துழைப்பு வழங்கப்போவதில்லை. ஆகையினால இதனைச் சாதிப்பதற்காக பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ளும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதே சனாதிபதி சந்திரிகாவின் ஒரே இலட்சியமாகும்.

இதற்கு ஒரே வழி பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் இருப்பவர்களை ஆளும் கட்சிப்பக்கம் இழுத்துக் கொள்வதே. சனாதிபதி சந்திரிகாவின் இம் முயற்சியானது இன்று தொடங்கியதல்ல. சிறுபான்மை அரசாங்கத்தை அமைத்தபோதே தொடங்கப்பட்டதொன்றாகும். இந்தவகையிலேயே சபாநாயகர் தெரிவிற்கு முன்பதாகவே ஜாதிகஹெல உறுமயவிற்குள் பிளவு ஏற்படுத்தப்பட்டது.

எதிர்க்கட்சிகளைப் பிளவுபடுத்துதல், அன்றிப் பேரம் பேசுதல் மூலம் முழுமையாக இணைத்துக்கொள்ளுதல் என்பதே ஆரம்பம் முதலே ஆளும் கட்சியினால் முன்னெடுக்கப்பட்ட வழிமுறையாகும். இதற்கு அமைச்சுப் பதவி என்ற வலை வீசப்பட்டது.

இவ்வழி முறையில் ஜாதிகஹெல உறுமய, முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்பன பிளவுபடுத்தப்பட்டோ அன்றி முழுமையாகவோ உள்வாங்கப்பட்டன. இதெற்கென அமைச்சுப் பதவிகள், பிரதி அமைச்சுப் பதவிகள், இளாக இல்லாத அமைச்சு என்பன, பரிசாக வழங்கப்பட்டன.

இந்த வகையில் தற்பொழுது பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே கட்சியின் பக்கம் சந்திரிகா அரசாங்கத்தின் கவனம் திசை திரும்பியுள்ளது. இதன் முதற்கட்டமாக வரவு-செலவுத் திட்ட விவாதத்தன்று ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஆளும் கட்சிக்குத் தாவினார். அதற்காக உடனடியாகவே பிரதி அமைச்சர் பதவி பரிசாகக்கொடுக்கப்பட்டது. இந்நிலையில் தற்பொழுது மேலும் பல ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆளும் கட்சிக்குத்தாவப் போவதாக ஆளும் கட்சி கூறத்தொடங்கியுள்ளது.

இச் சூழ்நிலையில் தான் ஐ.தே.கட்சி ஆளும் கட்சி சமாதான முயற்சிகள் தொடர்பாக வழங்க முன்வந்த ஆதரவை மறுபரிசீலனை செய்யத் தீர்மனித்துள்ளது அதாவது இனப்பிரச்சினை தொடர்பான தமது நிலைப்பாட்டை வைத்து தம்மைப் பலவீனபபடுத்தி விட ஆளும் கட்சி முற்பட்டுள்ளதாக ஐ.தே.கட்சி கருதத் தொடங்கியுள்ளமையே இந்நிலைக்குக் காரணமாகும்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்குக் கிடைத்த அரியவாய்ப்பைத் தவறவிடும் முதலாவது சந்தர்ப்பம் அல்ல இது. 1994 இல் அவர் பொதுத் தேர்தலிலும், சனாதிபதித் தேர்தலிலும் அமோக வெற்றிபெற்றபோது ஒரு அரிய சந்தர்ப்பம் கிட்டியது. அன்று அவருக்கு மக்கள் நேரடியாகவே சமாதானத்திற்கான ஆணையை வழங்கியிருந்தனர். அருமையானதொரு அரசியல் சூழ்நிலையும் நிலவியது. இத்தகையதொரு அரிய வாய்ப்பு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவால் மீண்டும் ஒரு தடவை 2004 இல் சனாதிபதிக்கு வழங்கப்பட்டது. அதாவது மக்களின் பிரதிநிதிகளில் ஒருதரப்பினரான பிரதான எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாய்ப்பை வழங்கினர்.

ஆனால் சனாதிபதி சந்திரிகா இவற்றை நாட்டிற்குப் பயன் தரும் வகையில் பயன்படுத்திக் கொண்டதாக இல்லை. தமது அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்காகவே பயன்படுத்திக் கொண்டார்/ கொள்ள முற்பட்டுள்ளார். ஆனால் இது நாட்டை அழிவுப்பாதையிலேயே இட்டுச்செல்லும். இதற்குக் கூட சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் உதாரணம் உண்டு.

### —வேப்பங்குளத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம்—

# பொலிஸ் விசாரணைக்கு உதவி புரியுமாறு வன்னித்தளபதிக்கு நீதிமன்று உத்தரவு!

வேப்பங்குளத்தில் மாவீரர் நிகழ்வின்போது நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பாக உரிய விசாரணை நடத்தி, குற்றம் செய்தவர்களை நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு பொலிஸ் விசாரணைக்கு உதவி புரியுமாறு வன்னிப் பிராந்திய ஆயுதப்படைகளின் தளபதிக்கும், வவுனியா 211 ஆம் படைப்பிரிவின் படைத்தளபதிக்கும வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் திங்களன்று உத்தர விட்டுள்ளார்.

வேப்பங்குளத்தில் நடைபெற்ற துப்பாக்கிப்பிரயோகமானது அத்துமீறிய ஒரு சம்பவமாகும்.இன்று அவசரகாலச் சட்டம் அமுலில் இல்லாத வேளையில் இராணுவத்தினர் துப்பாக்கிகளைப் பயன்படுத்தும்போது அது தொடர்பாக அவர்களுக்குரிய வரையறைகளை அவர்கள் தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டும். சிவில் நிர்வாகத்தை நடைமுறைப்படுத்துவதில் பொலிஸ் திணைக்களமே முதன்மையான சட்ட அமுலாக்கல் பிரிவாகச் செயற்பட்டு வருகின்றது எனத்தெரிவித்த நீதவான் ரி 56 ரக துப்பாக்கி அல்லது இயந்திரத் துப்பாக்கிகள் அவசரகாலச் சட்டம் அமுலில் இல்லாத சூழ்நிலையில் சட்ட விரோதமாகக் கூடுபவர்களைக் கலைப்பதற்காகப் பயன்படுத்தப் படுமானால், அதிகார பலாத்காரம் புரிந்ததாகக் கருத வேண்டி ஏற்படும். எனவே குற்றம் புரிந்தவர்களை நீதிமன்றத்தின் முன் நிறுத்துமாறு வன்னிப் பிராந்தியத்தின் இராணுவத் தளபதிகளுக்கு நீதிமன்றம் உத்தரவிடுகின்றது எந்த ஒருசந்தர்ப்பத்திலும், நீதிமன்றத் தீர்ப்பைத் தவிர வேறு எவரும் எவரையும் தண்டனைக்கு உள்ளாக்க முடியாது. வேப்பங்குளத்தில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்தவர்கள் வவுனியா, அனுராதபுரம் வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றார்கள். இவர்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் கொலை முயற்சிக் குற்றமாகும். எனவே வேப்பங்குளம் சம்பவத்தில்ஈடுபட்ட இராணுவத்தினரின் துப்பாக்கிகள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேணடும. குறித்த துப்பாக்கிகள் மேலதிக புலன் விசாரணைக்காக வவுனியா பொலிஸ் தலைமையகத்திடம் கையளிக்கப்பட வேண்டும். வேப்பங்குளம் சம்பவத்தில் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட அனைத்துப் பொருட்களும் மேல் விசாரணைக்காக உடனடியாகப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட இராணுவத்தினர் புலன் விசாரணைக்காக பொலிசாரிடம் ஆஜர் செய்யப்பட வேண்டும். குற்றம் புரிந்தவர்களைக் கண்டுபிடிப்பதற்காக இந்தச் சம்பவம் குறித்து இராணுவப் பொலிசாரின் மூலம் விசாரணைகள் நடத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த உத்தரவின் பிரதிகள் வன்னிப்பிராந்திய பிரதி பொலிஸ் மாஅதிபர், இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சாந்த கொட்டேகொட ஆகியோருக்கும் தகவலுக்காக சட்டமா அதிபருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.(32)

# பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மாவீரர் நாள் அனுஷ்டிப்பு

### தமிழ் மாணவர்கள் பொலிசாரால் விசாரணை

(பேராதனை)

கண்டி-பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மாவீரர் நாள் மாணவர்களினால் அனுஷ்டிக்கப்பட்டது. இதே வேளை இதற்கு செயற்பாடுகள் மேற்கொண்ட தமிழ் மாணவர்கள் பொலிசாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

நேற்று முன்தினம் தமது விடுதியில் இது தொடர்பான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்த சமயம் சில மாணவர்களினால் இது பற்றி பல்கலைக்கழக பாதுகாப்புப்பிரிவிற்கு அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து அங்கு வரவழைக்கப்பட்ட பேராதனைப் பொலிசார் தமிழ் மாணவர்கள் தங்கியிருந்த இடத்தில் சோதனை நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து ஏற்பாட்டாளர்களான இரண்டு மாணவர்கள் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணையின் பின்பு விடுவிக் கப்பட்டுள்ளனர்.

# பொலிஸ் நிலையத்திலிருந்து மிதிவெடிகள் மறைவு

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் நிலையத்திலிருந்து ஆறு மிதிவெடிகள் மர்மமான முறையில் காணாமற்போயுள்ளன.

அப்பகுதியில் மிதிவெடி அகற்றும் பிரிவினரால் அகற்றப்பட்டு செயலிழக்கச் செய்வதற்காக 12 மிதிவெடிகள் அங்கு வைக்கப்பட்டிருந்ததாகவும், அவற்றில் 6 காணாமற்போயுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவற்றில் வெடிபொருட்கள் இருப்பதால் அப்பிரதேச மீனவர்களுக்கு இவை திருட்டுத் தனமாக விற்கப்பட்டிருக்கலாம் என பொலிசார் சந்தேகம் தெரிவித்தனர்.

# இலங்கை மக்களுக்கான ஆட்சிமுறை ஒன்று தேவையாம்

### -அமைச்சர் சி.பி.ரட்ணநாயக்க

இலங்கையில் மக்களுக்கான ஆட்சிமுறை ஒன்றை அனைவரும் இணைந்து உருவாக்க வேண்டும் என அமச்சர் சி.பி ரட்ணநாயக்க வேண்டுகோள் விடுத்துள்ளார். இந்த நிலையில் எதிர்கால சந்ததியினரைக் குறிப்பாக இளைய சமுதாயத்தினரை சிறந்தவர்களாக உருவாக்க உரிய திட்டங்களை உருவாக்க வேண்டும் எனவும் அவ் வலியுறுத்தியுள்ளார். இன்றய இளைஞர்களே நாளைய தலைவர்கள் என்பதால் அவர்களின் எதிர்காலத்திற்காக இப்போதே செயற்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார். (32)

# சட்டவிரோதமாக நியூசிலாந்து புறப்பட இருந்த 18 பேர் கைது

சட்ட விரோதமான முறையில் நியூசிலாந்திற்கு புறப்படவிருந்த 18 பேர் நேற்று அதிகாலை புத்தளம் கற்பிட்டியில் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

கடல் வழியாக நியூசிலாந்திற்கு இவர்கள் மேற்கொள்ளவிருந்த பயணம் குறித்துப் பொலிசாருக்குக் கிடைத்த தகவலையடுத்து அங்கு விரைந்த பொலிசார் இவர்களைக் கைது செய்தனர். இவர்கள் பயணம் செய்யவிருந்த படகும் பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.கைதானவர்களில் நால்வர் தமிழர்கள் ஒருவர் முஸ்லிமாவார். மேலும் 78 பேர் சம்பவத்தின் போது தப்பிச்சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது இவர்கள் ஒவ்வொருவரும் தமது பயணத்துக்காக தலா ஒரு இலட்சத்திற்கு மேலதிகமான பணத்தைக் கொடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான சட்ட விரோத செயல் கடந்த மே மாதம் முதல் இடம் பெற்று வந்துள்ள போதும் இன்றே முதல் தடவையாக இந்தச் சட்டவிரோத செயல் தெரியவந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இரு தானியங்கித் துப்பாக்கிகளுடன் ஜேர்மன் பிரஜை கைது

காலி பத்தேகமவில் இரண்டு தன்னியக்கத் கைத்துப்பாக்கிகளுடன் 67 வயது ஜேர்மன் பிரஜையொருவர் நேற்று முன்தினம் பொலிசாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இரு வாரங்களுக்கு முன்பு உல்லாசப் பயணியாக வருகை தந்திருந்த இவரிடம் இந்தத் துப்பாக்கிகள் எப்படிக் கிடைத்தது என்பது குறித்தும், இவற்றை அவர் எதற்காக வைத்திருந்தார் என்பது குறித்தும் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

குறிப்பிட்ட துப்பாக்கி பெல்ஜியம் மற்றும் இத்தாலி நாட்டுத் தயாரிப்புக்கள் என்றும் இந்தத் துப்பாக்கிகளுடன் 42 ரவைகளும் கைப்பற்றப்பட்டதாகவும் பத்தேகம பொலிசார் தெரிவித்தனர்.

# மிதிவெடித் தடை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட

# சிறிலங்காவிற்கு அவுஸ். அழுத்தம்

## யாழ்.வந்த அவுஸ்.அமைச்சு தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மிதிவெடித்தடை ஒப்பந்தமான "ஒட்டாவா" ஒப்பந்தத்தில் இலங்கை அரசாங்கத்தை கையெழுத்திடுமாறு வலியுறுத்தும் நடவடிக்கைகளில் அவுஸ்திரேலிய அரசு ஈடுபட்டு வருவதாக நேற்று (29.11.2004) யாழ்.குடாநாட்டிற்கு விஜயம் செய்திருந்த அவுஸ்திரேலியாவின் பாராளுமன்ற விவகாரத்துறை அமைச்சரும் பாராளுமன்ற செயலாளர் நாயகமுமான புறூஸ்பில்சன் தெரிவித்துள்ளார்.


யாழ்.குடாநாட்டில் மிதி வெடிகள் அகற்றும் செயற்பாடுகள் தொடர்பாக நிலவும் நடைமுறைச் சிக்கல்கள் நறித்து ஆராய்வதற்காக யாழ். வந்த இவர் யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் யாழ்.மாவட்ட தலைமை அதிகாரி யூடிற்புறூனே ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான தூதரகத்தின் யாழ்.மாவட்ட தலைமை மொறாட்டா, யாழ்.மாவட்ட மிதிவெடிகள் அகற்றும் செயற்பாட்டுக் குழுவின் பொறுப்பதிகாரி எல்மோ ஆனந்த ராஜா, இக்குழுவின் பொறியியல் பிரிவுத் தலைவர் ரின்கோணர் ஆகியோரை யாழ்.அரச செயலகத்தில் வைத்துச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இதில் கருத்துத் தெரிவித்த புறூஸ் பில்சன் மேலும் தெரிவிக்கையில்,

மிதிவெடித்தடை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் விடயத்தில் இலங்கை அரசு தாமதப்போக்கைக் கடைப்பிடித்து வருவதால் இவ் ஒப்பந்தத்தில் இலங்கை அரசைக் கைச்சாத்திடச் செய்வதற்கான வற்புறுத்தல் நடவடிக்கைகளில் அவுஸ்திரேலிய அரசு ஈடுபடுகிறது. இது தொடர்பாக நைரோபியில் நடைபெறவுள்ள "ஒட்டாவா" உடன்படிக்கை பற்றிய மாநாட்டில் அவுஸ்திரேலிய அரசு பிரஸ்தாபிக்க உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் இலங்கையில் மேற்கொள்ளப்படவிருக்கும் வெடிபொருள் அகற்றும் செயற்பாடுகளுக்கென 1.55 மில்லியன் டொலர்களையும் ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் மனிதாபிமான செயற்பாடுகளுக்கு 2.5 மில்லியன் டொலர்களையும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித்திட்டத்திற்கு ஒரு மில்லியன் டொலரும் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் இந்நிதி வடக்கு-கிழக்கு மாகாணங்களை மையமாகக் கொண்டு செயற்படுத்தபடும் எனவும் தெரிவித்தார்.

இவருடன் அவுஸ்திரேலியாவின இலங்கைக்கான தூதுவர் டேவிட பீன்ஸ் மற்றும் அவுஸ்தி ரேலிய வெளிவிவகார அமைச்சக அதிகாரிகள் ஆகியோர் யாழ்.வந் திருந்தமை குறிப்பிடத்தக்கது. (33,27)



துயிலு மில்லத்தில் சுடரேற்றல்

மன்னார் பெரியபண்டி விரிச்சான் மாவீரர் துயிலும் இல்லத்தில் தமிழீழ நிதிப் பொறுப்பாளர் தமிழ்க்குமரன் சுடரேற்றுவதை படத்தில் காணலாம்.

## ஈராக்கில் கடத்தப்பட்டவரின் விடுதலைக்கு உடன் நடவடிக்கை தேவை!

### நுவரெலியா மாநகரசபை தீர்மானம்

ஈராக்கில் கடத்தப்பட்ட தினேஸ் தர்மேந்திரா ராஜரட்ணத்தின் விடுதலைக்காக அரசாங்கம் உடனடியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என நுவரெலியா மாநகரசபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இது குறித்த மாநகர சபையின் உறுப்பினர் நேருஜி தெரிவிக்கையில் தினேஸ் ராஜரட்ணம் கடத்தப்பட்டு நீண்ட காலம் ஆகியும் இதுவரை முக்கியமான எந்த மாற்றங்களும் நடைபெறவில்லை எனத் தெரிவித்த அவர்அரசாங்கம் இது குறித்து அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுள்ளார்

இதேவேளை கடத்தப்பட்ட ராஜரட்ணத்தை மீப்பது தொடர்பாக அரசாங்கம் எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை எனவும் அவரது விடுதலையில் கொண்டிருந்த நம்பிக்கை தமக்குத்தளர்வடைந்து வருவதாகவும் அவரது குடும்பத்தினர். இராஜரட்ணம் தமிழர் என்பதினாலேயே அவர்கள் இவ்விடயத்தில் அக்கறை காட்டவில்லை எனவும் தெரிவித்துள்ளனர். (32)

## மீண்டுமொரு யுத்தத்திற்கு அனுமதிக்கப் போவதில்லை

### -யாழ்.வந்த ஜெயவர்த்தனபுர பல்கலை மாணவர் சமூகம்

இலங்கையினில் மீண்டுமொரு யுத்தமொன்றை தோற்றுவிப்பதற்கான முயற்சிகளில் தென்னிலங்கை அரசியல் சக்திகள் பலவும் முற்பட்டுள்ள போதும் அதில் அவர்கள் வெற்றிபெற நாம் அனுமதிக்கப் போவதில்லையென கோட்டை ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவ சமூகம் வலியுறுத்தியுள்ளது.

குடாநாட்டிற்கான விஜயமொன்றை மேற்கொண்டு வருகை தந்துள்ள மாணவர் பிரதிநிதிகள் மற்றும் விரிவுரையாளர் குழுவொன்று இன்று யாழ்.மாவட்ட அரச சார்பற்ற அமைப்புக்களின் இணைய அவலகத்திற்கு விஜயம் செய்துள்ளது. நல்லூர் கோவில் வீதியிலுள்ள இணைய அலுவலகத்திற்கு இன்று காலை விஜயம் செய்த குழுவினரும், யாழ். மாவட்ட அரச சார்பற்ற அமைப்புக்களின் இணைத்தலைவர் டாக்டர் வை.தியாகராசா தலைமையிலான பிரதிநிதிகள் குழுவினரும் சந்தித்துப் பேச்சுக்களை நடாத்தினர்.

குறிப்பாக தென்னிலங்கையினில் யுத்தத்திற்கு ஆதரவாக சில சக்திகள் பிரச்சாரம் செய்து வருவது தொடர்பாக அப்போது எழுப்பப்பட்ட கேள்வியொன்றிற்கு பதிலளிக்கையிலேயே மேற் கண்டவாறு அவர்கள் தெரிவித்தனர். அத்துடன் இலங்கையில் பேச்சுக்கள் மூலமே நிரந்தரத் தீர்வொன்றைப் பெற்றுக்கொள்ள முடியுமென்பதில் தாம் பூரணமான நம்பிக்கை கொண்டிருப்பதாக தெரிவித்த பல்கலைக்கழக சமூகத்தினர், நிரந்தர சமாதானத்தினைக் கட்டியெழுப்பும் விடயத்தில் பல தரப்புக்களும் விட்டுக்கொடுப்புக்களுடன் செயலாற்ற வேண்டுமெனவும் கோரிக்கைகை விடுத்தனர். (27)

## திருமலையில...

மலையில் சிங்கள இனத்தவர்கள் நடத்திய எந்தநிகழ்வுகளையும் தமிழ் மக்கள் குழப்பவில்லை. நாகரீகமான முறையில் நடந்து அவர்களின் நிகழ்வுகளுக்கு மதிப்பளித்து வந்தனர். ஆனால் தமிழ் மக்களால் திருமலையில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்ட மாவீரா நாள் நிகழ்வுகளைக் குழப்பும் வகையில் சிங்கள காடையர்களும ஜே.வி.பி.யினரும் படைத்தரப்புடன் இணைந்து செயற்பட்டமையானது அநாகரிகமான செயல். இது போருக்கன சூழலையே ஏற்படுத்தும் எனவும் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் கண்காணிப்புக்குழு திருமலை மாவட்ட அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார். (லோ)

## பொலிசாருக்கு...

அரசாங்கம் எதிர்பார்த்த குற்றச்செயல்களின் அளவைவிட மனித உரிமைமீறல் என்ற பிரச்சினை சர்வதேச ரீதியில் அதிகரிக்கக் கூடும் என்ற ஐயமும் ஏற்பட்டுள்ளது. அத்தோடு அவசரகாலச் சட்டம் இல்லாத ஒரு தருணத்தில் பொலிசாருக்கு அதிகாரத்தைக் கொடுக்கலாமா அல்லாவிடின் அவற்றை எந்த அடிப்படையில் வழங்கலாம் என்றும் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. (32)

## தென்னாபிரிக்கக் குழுவுடன் தமிழ் கூட்டமைப்பினர் பேச்சு

(கொழும்பு)

தென்னாபிரிக்கா அரசியல் மற்றும் வர்த்தகக் குழுவுடன் தமிழ்த் தேசிய கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் 3.00 மணியளவில் இடம்பெற்ற மேற்படி சந்திப்பில் இலங்கை இனப்பிரச்சினையில் தென்னாபிரிக்கா எவ்வாறான கருத்துக்களைக் கொண்டுள்ளது என்ற கருத்துப்பகிர்வு மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன் தென்னாபிரிக்காவில் கறுப்பு, வெள்ளை இனப்பிரச்சினை உள்ளதுபோல், இலங்கையில் தமிழ், சிங்களம் என்ற இனப்பிரச்சினை மேலோங்கிக் காணப்படுகின்றது.

இதற்கு இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை என்ற அடிப்படையில் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்வதன் மூலமே வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் வாடிக்கையை இயல்பு நிலைக்குக் கொண்டு[illegible] முடியும் என்று கூறியுள்ளனர்.

மேலும் தமிழ் மக்களி[illegible] பிரச்சினைக்குத் தீர்வு காண்பதி[illegible] அரசாங்கம் தொடர்ந்து இழுத்தடி[illegible]புச் செய்துவருகின்றது. எனவே தமிழ் மக்களுக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு முன்பு இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை ஒன்றை வழங்கினார். அது தற்காலிகத் தீர்ப்பாக இருக்கும்.

இந்த நிலைப்பாட்டைத் தென்னாபிரிக்கக் குழுவினர் சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்த வேண்டும் தமிழ்த்தேசியக் கட்டமைப்பு உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இச்சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோசப்பரராஜசிங்கம், கஜேந்திரகுமார், செல்வம் அடைக்கலநாதன், சுரேஸ்பிறேமச்சந்திரன், ஆர்.சம்பந்தன் ஆகியோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (32)

### -அவுஸ். அகதிமுகாமில்-

## உண்ணாவிரதமிருக்கும் இருவர் நிலை கவலைக்கிடம்

தம்மை தாயகத்துக்குத் திருப்பி அனுப்ப வேண்டாம் என்று கோரி அவுஸ்திரேலிய அகதி முகாமில் உண்ணாவிரதப் போராட்டம் மே[illegible] கொண்டு வரும் இலங்கை அகதிகளில் இருவரின் உடல்நிலை மோசமடைந்துள்ளது.

இவர்கள் இருவரினதும் நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளதாவும் இருவரும் மிகவிரைவில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படலாம் என்றும் அகதிகளுக்கான அவுஸ்திரேலிய அமைப்பின் பேச்சாளர் மிரா ரொப்லெஸ்கி தெரிவித்துள்ளார். இருவரும் மிகவும் சோர்ந்து வலுவிழந்த நிலையில் காணப்படுவதாகவும் அவர்களின் பேச்சாற்றலும் படிப்படியாகக் குறைந்துசெல்வதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். தெற்கு அவுஸ்திரேலியாவில் உள்ள பக்ஸ்டர் அகதிக[illegible] தடுப்புமுகாமில் உள்ளவர்களில் இலங்கையர்கள் 11 பேர் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழர்கள் மீது...

திருகோணமலை ஆலடி விநாயகர், பத்திரகாளி அம்பாள் ஆலயம், ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி என்பவற்றின் அருகாமையில் அமைக்கப்பட்டிருந்த மாவீரர் தின பதாதையை தகர்க்க முற்பட்டனர். இதனால் சிங்களவர்களுக்கும் தமிழ் இளைஞர்களுக்கும் இடையே மோதல் உருவானது. ஸ்தலத்திற்கு பொலிசார் விரைந்து வந்து நிலமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். அவ்வேளை ஆலடி விநாயகர் ஆலயத்தில் பூசை நடைபெற்றுக் கொண்டிருந்தது. பொலிசார் ஆலயத்தை உடனடியாக மூடுமாறு பணித்தனர். நகரில் நிலமைகள் மேலும் மோசமடைவதைத் தடுக்கும் முகமாக காலை 11.00 மணி தொடக்கம் பொலிஸ் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. மதியம் 11.20 மணியளவில் திருகோணமலைக்கும் மட்டக்களப்புக்கும் இடையே சேவையில் ஈடுபடும் திருகோணமலையைச் சேர்ந்த முருகையா சுரேஸ்குமார் என்பவருக்கு சொந்தமான பேருந்தை திருத்தும் இடத்தில் இருந்து எடுத்து வருகையில் அதனைச் சூழ்ந்த சிங்களவர்கள் 5ஆம் கட்டைப் பகுதிக் காட்டுக்கு எடுத்துச் சென்று தீயிட்டனர். பேருந்து முற்றாக எரிந்தது. 12.15 மணியளவில் திருகோணமலை புல்மோட்டை வீதியில் உப்புவெளி பொலிஸ் நிலையத்திற்கு அண்மையில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் திருகோணமலைக் கிளையின் முன்னாள் தலைவரான ஈழத்து நாதன் என்பவரது வீடும் தாக்குதலுக்கு உள்ளாகிப் பலத்த சேதமடைந்தது. இவ்வேளையில் லவ்லேன் பகுதியூடாகச் சென்ற கடற்கரைச் சேனை மூதூரைச் சேர்ந்த அருமைத்துரை ரவிச்சந்திரன் என்பவர் சுகாதார அலுவலகத்தின் மருந்துப் பொருள் களஞ்சிய சாலைக்கு முன்னால் வைத்து சிங்கள இளைஞர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டார். அவர் பயணித்த ஹீரோ ஹொண்டா உந்துருளி பலத்த பாதிப்புக்கு உள்ளானது. மதியம் 12.20மணியளவில் அலஸ் தோட்டம் உல்லாச விடுதி ஒன்றில் இருந்து எரிபொருள் நிரப்புவதற்காகச் சென்ற சிற்றூர்தி ஒன்று எரியூட்டப்பட்டது. இந்த சிற்றூர்தியில் சென்ற அதன் உரிமையாளருக்கு என்ன நடந்தது என்பது இன்னமும் தெரியவரவில்லை. ஜேர்மனியில் இருந்து வந்த உல்லாசப் பிரயாணிகளை அழைத்து வந்த சிற்றூர்தியோடு தீக்கிரையாக்கப்பட்டது. மாலை அன்புவழிபுரம் கலைமகள் வித்தியாலயத்திற்கு அருகேயுள்ள அபயபுரம் எல்லையில் வசித்து வந்த 20 தமிழ் குடும்பங்கள் பாதுகாப்புக் கருதி இடம் பெயர்ந்து கலைமகள் வித்தியாலயத்தை வந்தடைந்தனர். இங்கு வந்த இராணுவத்தினர் வீதிகளில் நின்ற 15இற்கும் மேற்பட்ட இளைஞர்களை விசாரணைக்காக அழைத்துச் சென்று பின்னர் விடுவித்தனர். பின்னர் கலைமகள் பாடசாலைக்கு வந்த இராணுவத்தினர் இடம் பெயர்ந்தவர்களை மீண்டும் சொந்த இடத்திற்கு திரும்பிச் செல்லுமாறும் உங்களுக்கு உரிய பாதுகாப்பினை வழங்குவதற்கு தாங்கள் தயாராக இருப்பதாகவும் கூறி அழைத்துச் சென்றனர். அன்புவழிபுரம் அபயபுரம் பகுதியில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்டதன் காரணத்தாலேயே அவர்கள் இடம்பெயர்ந்து வந்தனர். இரவு 7.45 மணியளவில் உப்புவெளி சிறிமாபுரம் பகுதியில். இரண்டு கைக்குண்டுகள் வெடித்துள்ளன. எவ்வித சேதங்களும் இடம் பெறவில்லை. இதனை வெடிக்க வைத்தவர்கள் யார் என்பது இன்னமும் தெரியவில்லை. மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்துவதற்காக இது வெடிக்க வைக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இதேவேளை இரவு 11.1[illegible] மணியளவில் திருக்கடலூர் பகுதி தமிழ் கிராமத்தில் சிறிலங்கா படையினரால் 4தமிழர்களின் வீடுகள் தீவைக்கப்பட்டு எரிந்து கொண்டிருப்பதாகவும் ஊரடங்கு காரணமாகவும் சிங்களக்காடையர்களின் நடமாட்டம் காரணமாகவும் எவரும் உதவிக்கு செல்லமுடியாத நிலை உருவாகி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் சேதவிபரங்கள் எதுவும் அறிய முடியாதிருப்பதாகவும் பிந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.